பக்கங்கள்: பதினான்கு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 7.00

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 ஆவணி 19 புதன்கிழமை (04-09-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:281

# ஜனாதிபதி-பிரதமர் பேச்சு முறுகல் நிலை தணிந்தது!

## ஜே.வி.பி. ஆர்ப்பாட்டம்!

கொழும்பு,செப்.4

புலிகள் மீதான தடையை நீக்க வேண்டாம் எனக் கோரி ஜே.வி.பி. யினர் நேற்றுக் கொழும்பில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

கொழும்பு கோட்டை ரயில் நிலைய முன்றலில் ஆரம்பமான எதிர்ப்பு ஊர்வலம் காலிமுகத்திடலில் முடிவடைந்தது. அதன் பின்னர் அங்கு ஒரு கூட்டமும் இடம்பெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் அங்கிருந்து அமைதியாக வெளியேறி

(14 ஆம் பக்கம் பார்க்க)

## அதிகாரவெட்டுச் சட்டத்தின் 'கசெட்' அறிவிப்பை சிறிதுகாலம் தாமதித்துவைக்க ரணில் இணக்கம்

கொழும்பு,செப்ரெம்பர்4

**ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் நேற்றுக்காலை ஜனாதிபதி செயலகத்தில் சுமார் இரண்டு மணிநேரம் சந்தித்துப் பேசினர். இதனையடுத்து இருவருக்கும் இடையில் அரசியல் கருத்து வேறுபாடு தொடர்பாக இதுவரைகாலமும் நிலவிவந்த முறுகல்நிலை சற்றுத் தணிந்ததாகக் கூறப்படுகின்றது.**

**ஜனாதிபதியின் அதிகாரத்தை வெட்டுவதற்கு வகைசெய்யும் விதத்தில் ஐ.தே.முன்னணி அரசு முன்வைத்துள்ள 19 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை அரச வர்த்தமானியில் பிரசுரிப்பதை,நேற்றைய சந்திப்பை அடுத்து ஒருசில நாள்கள் தாமதிக்க பிரதமர் ரணில் இணங்கியிருக்கின்றார்.**

நாடாளுமன்றத்தைக் கலைக்கும் ஜனாதிபதியின் அதிகாரத்தை வெட்டுவதற்கு வழிசெய்யும் 19 ஆவது அரசமைப்புத் திருத்தத்திற்கு அமைச்சரவை ஏற்கனவே அங்கீகாரமளித்து விட்டது. எனினும், வெளிநாட்டில் இருந்த ஜனாதிபதி இந்த விடயம் குறித்துக் கருத்துத் தெரிவிக்கவும், அதனை அமைச்சரவையில் ஆராயவும் வசதியாக நேற்றையதினம் ஒரு விசேட அமைச்சரவைக் கூட்டத்தை நடத்தவும், அதன்பின் நேற்றிரவு விசேட வர்த்தமானி அறிவித்தலில் உத்தேச அரசமைப்புத் திருத்தத்தை பிரசுரிக்க

(14 ஆம் பக்கம் பார்க்க)

## மூடிய பாதையைத் திறக்கக் கோரி ஈ.பி.டி.பி. அலுவலகம் முன் மறியல்

ஊர்காவற்றுறை,செப்.4

ஊர்காவற்றுறை செபஸ்தியார் கோயில் சந்தியிலுள்ள ஈ.பி.டி.பி அமைப்பின் முகாமின் முன்பாகச் செல்லும் பிரதான வீதியை மக்கள் போக்குவரத்துக்குத் திறந்துவிடுமாறு கோரி இன்று காலை 7மணிக்கு மறியற்போராட்டம் நடத்தப்படவுள்ளது.

மெலிஞ்சிமுனை வெகுஜன அமைப்புகள் இணைந்து இதனை ஏற்பாடு செய்துள்ளன.

ஊர்காவற்றுறையில் இருந்து மெலிஞ்சிமுனை நோக்கிச் செல்லும் இந்த பிரதானபாதை கடந்த பல வருடங்களாக மூடப்பட்டுள்ளது. இத

(14 ஆம் பக்கம் பார்க்க)

உலகின் கவனம் தாய்லாந்தின் பக்கம்

## பேச்சின் ஆரம்ப வைபவத்திற்கு பத்திரிகையாளர் படையெடுப்பு!

கொழும்பு,செப்.4

இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே எதிர்வரும் 16ஆம் திகதிமுதல் 18ஆம் திகதிவரை முதல்சுற்று சமாதானப் பேச்சு நடைபெற இருப்பதையிட்டு உலகின் கவனம் இப்போது தாய்லாந்தின் பக்கம் திரும்பியிருக்கிறது.

பேச்சு ஆரம்ப வைபவம் தாய்லாந்து சட்டாஹிப் கடற்படைத்தளத்தில் பெரியஅளவில் ஏற்பாடாகியிருக்கிறது. இதில் கலந்து கொள்வதற்காக உலகெங்கும் இருந்து 350 இற்கும் மேற்பட்ட ஊடகவியலாளர்களும், இராஜதந்திரிகளும், அரசியல்

(14 ஆம் பக்கம் பார்க்க)

பாடசாலையை மூட படைத்தளபதிக்கு அதிகாரமா?

## கல்லூரிகளை உடனடியாக திறக்குக; தவறின் விளைவுகள் மோசமாகும்!

### மாணவர் அமைப்புகள் கூட்டாக எச்சரிக்கை

யாழ்ப்பாணம்,செப்.4

வடமராட்சியில் மூடப்பட்டுள்ள ஹாட்லிக் கல்லூரி மற்றும் மெதடிஸ்த பெண்கள் கல்லூரி ஆகியவற்றை உடனடியாக திறக்கவேண்டும். இல்லையேல் பாரிய விளைவுகளைப் படைத்தரப்புச் சந்திக்க நேரிடும்.

- இவ்வாறு யாழ்ப்பாணத்தில் உள்ள மாணவர் அமைப்புகள் கூட்டாக எச்சரிக்கை விடுத்துள்ளன.

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவன மாணவர் ஒன்றியம், யாழ். தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் ஒன்றியம், யாழ்.மாவட்ட மாணவர் ஒன்றியம் மற்றும் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை மாணவர் ஒன்றியம் ஆகியன இணைந்து இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளன.

பருத்தித்துறையில் நேற்றுமுன்தினம் மாணவர்கள் மற்றும் பொது மக்கள் இணைந்து மேற்கொண்ட போராட்டத்தின்போது மாணவர்கள்

(14 ஆம் பக்கம் பார்க்க)

கைதிகள் பரிமாற்றத்தின் கீழ்

## விடுவிக்கப்பட இருக்கும் புலிகளின் விவரங்களை கேட்கிறார் ஜனாதிபதி

கொழும்பு,செப்.4

அரசு - புலிகள் கைதிகள் பரிமாற்றத்தின் கீழ் அரசு விடுதலை செய்ய உத்தேசித்திருக்கும் புலிகளின் பெயர்ப் பட்டியலை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரியிருக்கின்றார்.

இது தொடர்பாக ஜனாதிபதி பிரதமருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்திருப்பதாக ஜனாதிபதி செயலகம் நேற்று அறிவித்தது.

கைதிகளை விடுவிக்க முன்னர் அவர்களின் பெயர்ப் பட்டியலைத் தரு

(14 ஆம் பக்கம் பார்க்க)

மறைவிடத்தில் ஆயுதங்கள் கண்டுபிடிப்பு:

## இராணுவத் தளபதி உட்பட 8 படையினர் மீது வழக்கு!

கொழும்பு,செப்.4

அத்துருகிரிய 'மிலேனியம் சிற்றி' வீடொன்றில் இருந்து பெருமளவு ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்ட விடயம் தொடர்பாக இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல, பிரிகேடியர் எம்.கே.ஆர்.ஜி. விதாரண மற்றும் ஆறு இராணுவத்தினருக்கு எதிராக கண்டி நீதிமன்றில் நேற்று குற்றப் பத்திரிகைகளை விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவுப் பொலீஸார் தாக்கல் செய்தனர்.

சம்பந்தப்பட்ட வீடொன்றிலிருந்து கடந்த ஜனவரி 28 ஆம் திகதி பெருந்தொகையான ஆயுதங்களும் வெடிமருந்துகளும் விசேட குற்றப்புலனாய்வுப் பொலீஸாரினால் கைப்பற்றப்பட்டிருந்தன.

புலிகளின் பகுதிக்குள் ஊடுருவித் தாக்குதல் நடத்தும் இராணுவத்தினரின் இரகசியப் பிரிவு பேணி வந்த மறைவிடமே அது என்றும் -

அவர்களின் பாவனைக்கான ஆயு

(14 ஆம் பக்கம் பார்க்க)

## தடைநீக்கம் குறித்து பொ.ஐ.முவில் பிளவு

புலிகள் மீதான தடை நீக்க விவகாரம் பிரதான எதிர்க்கட்சியான பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்குள் கருத்து வேற்றுமையை உருவாக்கியிருக்கிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவியும், பொ.ஐ.மு.தலைவியுமான ஜனாதிபதி குமாரதுங்க, பொ.ஐ.மு. பொதுச் செயலாளர் டீ.எம்.ஜயரத்ன, எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் பேச்சுக்கு முன் புலிகள் மீதான தடை நீக்கப்படுவதை ஒரே குரலில் எதிர்க்கின்றனர்.

ஆனால், முன்னணியில் இடம்பெறும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, தேசிய ஐக்கிய முன்னணி(நு.ஆ) ஆகியன புலிகள் மீதான தடைநீக்கப்படுவதை ஆதரிக்கின்றன; வரவேற்கின்றன.

(விவரம் 2 ஆம் பக்கத்தில்)

## முதல்சுற்றில் ஹக்கீம் அரச பிரதிநிதி பின்னர் முஸ்லிம் சமூகத்தின் சார்பில்!

### லண்டனில் பாலாவுடன் பேசி எடுத்த முடிவு

லண்டன்,செப்.4

அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் செப்ரெம்பர் 16 ஆம் திகதி தாய்லாந்தில் ஆரம்பமாகும் முதலாவது சுற்றுப் பேச்சுகளில் ரவூப் ஹக்கீம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் என்ற ரீதியில் அரசுப் பிரதிநிதியாகவே கலந்துகொள்வார்.

எனினும் பின்னர் நடைபெறும் சுற்றுப் பேச்சுகளின்போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் என்ற வகையிலும் முஸ்லிம் சமூகத்தை பேச்சுக்களில் பிரதிநிதித்துவப்படுத்தும் முஸ்லிம் தலைவர் என்ற ரீதியிலும் அவர் பங்குபற்றுவார். இது விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடையில் ஏப்ரல் 13ஆம் திகதி கைச்சாத்தான ஒப்பந்தத்தின் அடிப்படையிலான ஏற்பாடு ஆகும்.

நேற்று லண்டனில் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்திற்கும் ரவூப் ஹக்கீமிற்கும் இடையில நடந்த சந்திப்பின்போது இதற்கான இணக்கம் காணப்பட்டது.

லண்டனில் உள்ள நோர்வேத் தூதரின் இல்லத்தில் இரு தலைவர்களும் சுமார் இருமணிநேரம் விரிவாகக் கலந்துரையாடினர். அன்ரன் பாலசிங்கத்துடன் அவரது துணைவியார் அடேல் பாலசிங்கமும் பேச்சுகளில் கலந்துகொண்டார்.

நோர்வே அனுசரணையாளர் எரிக் சொல்ஹெய்மும் பேச்சுக்களின் போது உடனிருந்தார்.

(14 ஆம் பக்கம் பார்க்க)



இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# பருத்தித்துறையில் நேற்று கடையடைப்பு; முகாம் பகுதி மக்கள் வெளியேறத் தடை!

## காவலரண்களைப் படையினர் மீண்டும் அமைப்பு

பருத்தித்துறையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அசம்பாவிதச் சம்பவங்களைக் கண்டித்து நேற்றுப் பருத்தித்துறையிலும் மந்திகையிலும் கடையடைப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

இப்போராட்டத்தின்போது சந்தைகளும் போக்குவரத்துக்களும் வழமை போல நடைபெற்றபோதிலும் ஆட்டோக்களில் கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டிருந்தன.

இதற்கிடையே, நேற்றுமுன்தினம் அடித்துநொறுக்கப்பட்ட எல்லைக்காவலரண்களை மீண்டும் அமைப்பதில் படையினர் ஈடுபட்டிருந்தனர். காவற்கடமைகளில் கூடுதலான படையினர் ஈடுபடுத்தப்பட்டிருந்ததையும் காண முடிந்தது.

படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் அமைந்திருக்கும் கொட்டடி, முதலாம்குறுக்குத்தெரு, இரண்டாம் குறுக்குத்தெரு ஆகியவற்றில் வசிக்கும் சுமார் 40 குடும்பங்களை அங்கிருந்து வெளியேறப் படையினர் நேற்று அனுமதிக்கவில்லை.

இது தொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடமும், யாழ். மனித உரிமைகள் குழுவிடமும் முறையிடப்பட்டிருக்கின்றது. நேற்றுப் பருத்தித்துறைக்கு வந்த இக்குழுக்களின் அதிகாரிகள் பொதுமக்களிடமும், படை அதிகாரிகளிடமும் விவரங்களைக் கேட்டறிந்துகொண்டனர்.

முகாம் மையப்பகுதியில் அமைந்துள்ள கோட்டுவாசல் அம்மன் கோயில், கொட்டடிப் பிள்ளையார் கோயில் ஆகியவற்றில் பூசை செய்யவோ அல்லது வழிபடவோ குருக்களும் பொது மக்களும் செல்லப் படையினர் அனுமதிக்கவில்லை.

முகாமுக்கான ஐந்து முனை சென்றிகளில் சில சென்றிகளில் அனுமதியின்றிப் பிரவேசிப்போர் சுடப்படுவர் என்ற எச்சரிக்கை வாசகங்கள் காணப்பட்டன.

பருத்தித்துறை துறைமுகத்திற்கு பொருள்களை இறக்க கப்பலொன்று வந்தபோதிலும் தொழிலாளர்கள் துறைமுகத்திற்குச் செல்லப் படையினர் அனுமதி வழங்கவில்லை. இதனால் அக்கப்பல் பொருள்களை இறக்காமலேயே காங்கேசன்துறைக்குத் திரும்பியது.

நேற்று நண்பகல் கவசவாகனத்தில் வந்த படையினர் மூடி இருந்த கடைகளை வீடியோ படம் பிடித்துச் சென்றனர். (ம-10-70-173)

## சித்தாண்டியில் புலிகளின் அரசியற்பணிமனை

மட்டக்களப்பு, சித்தாண்டிப் பிரதேசத்தில் புலிகள் தமது அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நோக்குடன் அரசியல் பணிமனை ஒன்றை நேற்றுக் காலை 10மணிக்கு திறந்துவைத்தனர்.

இந்நிகழ்வில் புலிகளின் குடும்பிமலை கோட்ட அரசியல் பொறுப்பாளர் எஸ்.ஜெயா, நிதிப்பொறுப்பாளர் சுபி உட்பட பல போராளிகளும், முக்கிய பிரமுகர்களும் கலந்துகொண்டனர். (ம)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,செப்.4

சங்கானை மற்றும் சண்டிலிப்பாய் பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் விசேட கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 10 மணிக்கு சண்டிலிப்பாய் ஐயனார் வீதியில் அமைந்துள்ள அதன் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது. (ம-10)

# பேச்சுக்கு முன் தடைநீக்கமா? தகுந்த பதிலடி கொடுப்போம்!

## கர்ஜிக்கின்றார் மஹிந்த ராஜபக்ஷ

கொழும்பு,செப்ரெம்பர்4

**"அரசு - புலிகள் நேரடிப் பேச்சு ஆரம்பமாக முன்னர் புலிகள் மீதான தடையை நீக்குவதா? கூடாது, அவ்வாறு பேச்சுக்கு முன் தடையை நீக்க முற்பட்டால் தகுந்த நடவடிக்கை எடுப்போம்; பதிலடி கொடுப்போம். பொறுத்திருந்து பாருங்கள். அந்த நடவடிக்கைகள் என்னவென்பதை சரியான நேரத்தில் வெளியிடுவோம்."**

**- இவ்வாறு முழங்கியிருக்கின்றார் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ. நேற்று தமது உத்தியோகபூர்வ இல்லத்தில் தாம் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு கூறினார். அவர் அங்கு மேலும் கூறியதாவது:-**

நாட்டில் சமாதானம் ஏற்பட வேண்டும். அதில் எமக்கு இரு வித கருத்து இல்லை. சமாதானத்திற்கான முயற்சியில் அரசுக்கும் நாம் பூரண ஒத்துழைப்பை வழங்குவோம். ஆனால், அதேசமயம் அரசு விடும் தவறுகளை சுட்டிக் காட்டும் தார்மீகப் பொறுப்பும் எதிர்க்கட்சி என்ற வகையில் எமக்குள்ளது.

புலிகள் மீதான தடை நீக்கம் குறித்து மட்டுமல்ல, இடைக்கால நிர்வாகம் தொடர்பாகவும் நாம் ஒரே கருத்தைத்தான் கொண்டிருக்கின்றோம்.

இறுதித் தீர்வை அடைவதற்கு முன்னர் ஏற்படுத்தப்படுவது இடைக்கால நிர்வாகம். அது எவ்வாறு, எந்த அடிப்படையில் அமையும் என்பதில் திட்டவட்டமான தெளிவு தேவை. இடைக்கால நிர்வாகத்தின் போது வழங்கப்படும் அதிகாரங்கள் எவை என்பதை எதிர்க்கட்சி என்ற வகையில நாமும் நாட்டு மக்களும் அறிந்திருக்க வேண்டும். அதனை எமக்குத் தெளிவுபடுத்துவது அரசின் கடமை.

இப்போது இடம்பெறப்போகும் பேச்சுக்களின் போது, வாய்க்கால் அமைப்பது பற்றியும் பாலம் கட்டுவது தொடர்பாகவும் தான் பேசப் போகின்றார்கள் என்பது தெளிவாகி விட்டது. இதற்காக அவசரப்பட்டு முடிவுகளை எடுக்க வேண்டிய அவசியமில்லை - என்றார்.

தடைநீக்கம் மற்றும் இடைக்கால நிர்வாகம் தொடர்பாக பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பொதுச செயலாளர் டி.எம்.ஜயரத்ன அங்கு கூறுகையில்:-

இந்த விடயங்கள் தொடர்பாக மக்களுக்கும் எதிர்க்கட்சிகளுக்கும் தெளிவுபடுத்த வேண்டும். உலகில் 168 நாடுகளில் போராட்டங்கள் நடந்து வருகின்றன. அவ்வாறான பல நாடுகள் போராளிகள் மீதான தடையை நீக்காமல் அவற்றுடன் பேச்சு நடத்தியுள்ளன.

தடையை நீக்கி விட்டுப் பேசுவது தான் சட்டரீதியானது என்றால் தற்போது அமைச்சர்கள் சென்று புலிகள் இயக்கத்துடன் நடத்தும் பேச்சுக்கள் அனைத்தும் சட்ட விரோதமானவையாகி விடும். நாம் அந்தப் பேச்சுக்களை எதிர்க்கவில்லை. அது சமாதானத்தின் மீது நாம் கொண்டுள்ள விருப்பதைக் காட்டுகிறது. ஆனால், அத்தியாவசியமான இடங்களில் நாம் தவறுகளைச் சுட்டிக்காட்டிச் செயற்படுவது அவசியமாகும்" - என்று தெரிவித்தார்.

தடைநீக்கம், இடைக்கால நிர்வாகம், ஆகியவை தொடர்பாக ஜனாதிபதி குமாரதுங்க கொண்டுள்ள கருத்தையே மேற்படி இரு தலைவர்களும் வெளிப்படுத்தியுள்ளனர்.

நேற்றைய பத்திரிகையாளர் மாநாட்டில் தேசிய ஐக்கிய முன்னணி தலைவி பேரியல் அஷ்ரப்பும் பங்கு பற்றினார்.

## நிமலராஜன் கொலை வழக்கு; மேலதிக அறிக்கை சமர்ப்பிப்பு

யாழ்ப்பாணம்,செப்.4

ஊடகவியலாளர் மயில் வாகனம் நிமலராஜன் படுகொலை தொடர்பாக பொலீஸாரினால் நேற்று யாழ்.நீதிமன்றில் மேலதிக அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த அறிக்கையில் ஈ.பி.டி.பி. அலுவலகத்தில் இருந்து எடுக்கப்பட்ட கைத்துப்பாக்கி தொடர்பான விவரம் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்று நிமலராஜன் சார்பாக ஆஜரான சட்டத்தரணி இரட்ணவேல் சுட்டிக்காட்டினார்.

இந்தக் கைத்துப்பாக்கி ஈ.பி.டி.பி. அலுவலகத்திலிருந்து எடுக்கப்பட்டது குறித்து குற்றப் புலனாய்வுப் பொலீஸ் அதிகாரி ரஞ்சித் டி சில்வா வாக்குமூலம் அளிக்காததனால் கைத்துப்பாக்கியை இரசாயன பகுப்பாய்வுக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கவில்லை என்று மன்றில் சுட்டிக்காட்டப்பட்டது.

இதனை அடுத்து பொறுப்பதிகாரி ரஞ்சித் டி சில்வாவை எதிர்வரும் 17 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு கடிதம் அனுப்பி வைக்குமாறு மன்றின் பதிவாளருக்கு நீதிவான் இ.த.விக்னராஜா உத்தரவிட்டார்.

இதேவேளை -

இந்த வழக்கின் சந்தேகநபர்கள் நால்வருக்கும் எதிராக இதுவரை எந்தச் சாட்சியங்களும் பொலீஸாரால் மன்றுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. ஒரு கொலைக் குற்றச்சாட்டில் தொடர்புபடுத்தக் கூடிய சாட்சியங்கள் இல்லாமல் சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைத்திருப்பது சட்டத்துக்கு முரணானது. எனவே அவர்களை பிணையில் விட வேண்டும் என்று சந்தேக நபர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி பொன்.வெற்றிவேலு மன்றில் கோரினார்.

இந்தக் கோரிக்கையை நீதிவான் நிராகரித்தார். (ம-10)

## தடையை நீக்கும் பூரண அதிகாரம் பாதுகாப்பு அமைச்சருக்கே உண்டு

### ஜனாதிபதி சட்டத்தரணி டெஸ்மன் கூறுகிறார்

கொழும்பு,செப்.4

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன் புலிகள் இயக்கம மீதான தடை நீக்கப்படுவதற்கு ஜனாதிபதி சந்திரிகா எதிர்ப்புத் தெரிவித்திருப்பதால் ஜனாதிபதியின் இணக்கம இல்லாமல் அரசு அத்தடையை நீக்க முடியுமா என்பது குறித்து அரசியல் வட்டாரங்களிலும் சட்டத்துறையிலும் ஆராயப்பட்டு வருகிறது.

புலிகள் இயக்கம் மீதான தடையை நீக்கும் சட்டபூர்வ அதிகாரம் நாட்டின் பாதுகாப்பு அமைச்சரான திலக் மாரபனவிடமே உண்டு என்று பிரபல சட்டவல்லுநரான ஜனாதிபதி சட்டத்தரணி டெஸ்மன பெர்னாண்டோ கூறுகிறார்.

புலிகள் இயக்கம் மீதான தடை நீக்கப்பட்ட பின் தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பிரயோகித்து அதை இரத்துச் செய்ய ஜனாதிபதிக்கு சட்டபூர்வ வலு கிடையாது எனவும் அவர் தெரிவித்திருக்கிறார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட 2001 இலக்கம் 1 கொண்ட கட்டளைப்படி 2001 ஜூலை 4 ஆம் திகதி வெளியான வர்த்தமானி அறிவித்தலில் புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்டது; பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் தனக்குள்ள அதிகாரத்தின்படியே ஜனாதிபதி அத்தடையை விதித்தார்.

தடைவிதிக்கப்பட்டவாறே அத் தடை விதிக்கப்பட்ட சட்டத்தின் கீழ் மற்றொரு உத்தரவை வர்த்தமானியில் பிரசுரித்து தடையை நீக்கும் அதிகாரம் பாதுகாப்பு அமைச்சருக்கு மட்டுமே உண்டு.

தடைநீக்கப்பட்டதாக வர்த்தமானி அறிவித்தல் வெளியான தினத்தில் இருந்து அது நடைமுறையாகும். திரும்பவும் அத்தடையைப் பிறப்பிக்க வேண்டுமானால் அவ்வாறு செய்யவும் பாதுகாப்பு அமைச்சருக்குப் பூரண அதிகாரமுண்டு.

- இவ்வாறு அவர் தெரிவித்திருக்கிறார்.

ஜனாதிபதி தேவையானால் பாதுகாப்பு அமைச்சர் பதவியைத் தனது கைகளில் எடுத்துக் கொண்டு, அந்தப் பதவி மூலம் தமக்குக் கிடைக்கும் அதிகாரங்களை இது விடயத்தில் பயன்படுத்தலாம் என்றும் ஒரு சாரார் சுட்டிக்காட்டுகின்றனர். (ம-12)

## புலிகள் மீதான தடைநீக்கத்துக்கு கம்யூனிஸ்ட் கட்சியும் ஆதரவு!

கொழும்பு,செப்.4.

அரசும் புலிகளும் நேரடிப்பேச்சுக்களை நடத்துவதே தற்போது முக்கியமாகத் தேவைப்படுகிறது; புலிகள் மீதான தடை விவகாரம் அல்ல.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி இவ்வாறு தெரிவிக்கிறது.

தடைவிவகாரம் தொடர்பான பிரச்சினையால் சமாதானப் பேச்சுக்கள் நிறுத்தப்படுமானால் தமது கட்சி அதனைமுற்றாக எதிர்க்கும் என்று கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டியூகுணசேகர தெரிவித்துள்ளார்.

புலிகள் மீதான தடை நீக்கப்பட வேண்டும் என்பதே தமது கட்சியின் நிலைப்பாடு என்றும் அவர் வலியுறுத்தினார்.

சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கும் நிலையில், அவ்வியக்கம் மீதான தடை முக்கியத்துவம் வாய்ந்தது அல்ல என்றும் அவர் குறிப்பிட்டார்.

பிரதான எதிர்க்கட்சியான பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் கம்யூனிஸ்ட் கட்சியும் அங்கம் வகிப்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## தடைநீக்கத்தை எதிர்க்காது லங்கா சமசமாஜக் கட்சி!

விடுதலைப் புலிகள் மீதான தடைநீக்கத்தை லங்கா சமசாஜக் கட்சி எதிர்க்கவில்லை.

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் அக்கட்சியின் பொதுச் செயலாளர் பட்டி வீரக்கோன்.

பிரதான எதிர்க்கட்சியான பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் லங்கா சமசமாஜக் கட்சியும் அங்கம் வகிக்கின்றது. ஆனால், பொ.ஐ.முன்னணியின் முக்கிய அங்கத்துவக் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, அரசு - புலிகள் நேரடிப் பேச்சுக்கு முன்னர் புலிகள் மீதான தடை நீக்கப்படுவதைக் கடுமையாக எதிர்த்து வருகின்றது: அதற்கு மாறான கருத்தை பட்டி வீரக்கோன் வெளியிட்டார்.

"புலிகள் மீதான தடை நீக்கப்படுவது குறித்து பொ.ஐ.முன்னணி ஒரு முடிவையும் இதுவரை எடுக்கவில்லை.

"பேச்சுக்கு முன்னர் தடைநீக்கப்படுவது என்பது கொள்கை சார்ந்த ஒரு விவகாரம் அல்ல. சமாதான முயற்சிகளை முன்னகர்த்துவதற்கான ஓர் உத்திசார்ந்த விடயமே அது. எனவே, அந்த நடவடிக்கையை முன்னெடுக்கும் பிரதமரே சூழ்நிலை, சந்தர்ப்பங்களுக்கேற்ப உத்திகளை வகுத்துச் செயற்பட வேண்டியவராகின்றார். எனவே, முடிவு எடுப்பது அவரின் பொறுப்பு. நாம் அதை எதிர்க்கத் தேவையில்லை.

ஆனால்; இடைக்கால நிர்வாகம் கொள்கை சார்ந்த விவகாரம். பல தரப்பினரும் தொடர்புபட்ட அந்த விடயத்தில் கொள்கை ரீதியான முடிவே எடுக்கப்பட வேண்டும். அதற்கேற்ப பலதரப்பும் சம்பந்தப்பட்ட - நியாயமான - கொள்கை ஒன்று வகுக்கப்பட்டு அதற்கேற்ப முடிவு எடுக்கப்பட வேண்டும் ஒரு தலைப்பட்சமான முடிவு எடுக்கக்கூடாது; எடுக்க முடியாது" - என்றார் பட்டி வீரக்கோன். (ம)

## தீவிரவாதியின் உறவினர்களான

# பலஸ்தீனரை காஸாவுக்கு துரத்த இஸ்ரேலிய நீதிமன்றம் அனுமதி!

## மனித உரிமைகளுக்கு கறுப்புநாள் என பலஸ்தீனத் தரப்பு விமர்சனம்

லண்டன்,செப்ரெம்பர்4

**பலஸ்தினத் தீவிரவாதி ஒருவரின் - மேற்குக்கரையில் வசிக்கும் - உறவினர்களை காஸா பிரதேசத்துக்கு கட்டாயப்படுத்தி அனுப்ப இஸ்ரேலிய மேல் நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியது. 'மனித உரிமைகளுக்கு கறுப்பு நாள்' என்று தீர்ப்பு வழங்கப்பட்ட தினத்தை பலஸ்தீனர்கள் வர்ணித்துள்ளனர்.**

பலஸ்தீன விடுதலை இயக்கமான ஹமாஸின் உறுப்பினர் அலி அஜோரி என்பவர் இஸ்ரேலுக்கு எதிரான தற்கொலைத் தாக்குதல்களுக்கு மூலகாரணமாக இருந்ததாக இஸ்ரேல் கூறி வந்தது. இதனடிப்படையில் அவரது சகோதர சகோதரியான கிபா (வயது 28), இந்திஸார் அஜோரி (வயது 34) ஆகியோரை அலிஅஜோரிக்கு தீவிரவாத நடவடிக்கைகளில் உதவியதாகக் கூறி கடந்த மாதம் இஸ்ரேலிய இராணுவம் மேற்குக்கரையில் வைத்து கைது செய்தது. இவர்களிருவரையும் இஸ்ரேலிய எல்லையில் உள்ள மேற்குக்கரையில் இருந்து தொலைவில் உள்ள காஸா பகுதிக்கு வலுக்கட்டாயமாக அனுப்பிவைக்க முடிவு செய்யப்பட்டது.

இதனை எதிர்த்து அவ்விருவரும் இஸ்ரேலிய மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தனர்.

இந்த வழக்கு விசாரணை 9 நீதிபதிகளைக் கொண்ட அமர்வின் முன்பாக இடம்பெற்றது.

தமது சகோதரன் அலி நடத்தவிருந்த தாக்குதல்கள் குறித்து முன்பே தெரிந்திருந்தும் அவற்றை தடுக்க எவ்வித முயற்சியும் இவர்கள் எடுக்கவில்லை என்றும் -



பலஸ்தீன தீவிரவாதி அலி அஜோரியின் சகோதரி (வலது புறம்) இஸ்ரேலிய நீதிமன்றத்துக்கு வந்த போது எடுத்த படம்.

சகோதரனின் தாக்குதல் நடவடிக்கைகளுக்கு வெடிபொருள்களை சேகரிப்பது உட்பட பல வழிகளிலும் இவர்கள் உதவியதாகவும் -

இஸ்ரேலிய இராணுவத்தின் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

காஸாவுக்கு தம்மைக் கடத்துவதன் மூலம் இஸ்ரேலிய இராணுவம் கூட்டுத் தண்டனை வழங்குவதாகவும-

இது சர்வதேசச் சட்ட திட்டங்களுக்கு முரணானது என்றும் -

குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தரப்பில் விவாதிக்கப்பட்டது.

இந்த வழக்கில் நேற்று வழங்கப்பட்ட தீர்ப்பில், சகோதரரின் தீவிரவாதத் தாக்குதலுடன் தொடர்புபட்டிருந்தமை நிரூபிக்கப்பட்டிருப்பதால் அவர்களை காஸா பகுதிக்கு கடத்திவிட அனுமதி வழங்கப்பட்டது.

இந்தத் தீர்ப்புக் குறித்து கருத்து வெளியிட்ட பலஸ்தீன அதிகாரி கூறுகையில் 'மனித உரிமைகளுக்கு கறுப்புநாள். இது தொடர்பாக ஐ.நா. பாதுகாப்புச் சபையிலும், சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திலும் முறையிடுவோம்' என்றார்.

இதேவேளை, இந்த வழக்கில் குறிப்பிடப்பட்ட தீவிரவாதியான அலி அஜோரி கடந்த மாதம் 6 ஆம் திகதி இஸ்ரேலிய இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(ஓ)

## புஷ் வீட்டின் மீது பறக்க முயன்ற விமானங்கள்

வாஷிங்ரன்,செப்.4

அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷுக்கு டெக்சாஸ் நகரில் ஒரு வீடு உள்ளது. அந்த வீட்டின் மீதாக விமானங்கள் பறக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது. அதை மீறி நுழைய முயன்ற 3 சிறிய விமானங்களை அமெரிக்க விமானப் படை விமானங்கள் தடுத்து நிறுத்தின.

அந்த விமானங்கள் வாகோ விமான நிலையத்திற்கு திருப்பி விடப்பட்டன. அங்கு விமானிகளிடம் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

## வாஜ்பாயை பதவி அகற்ற அத்வானி, ஜெயலலிதா சதி!

### தமிழகக் காங்கிரஸ் குற்றச்சாட்டு



சென்னை,செப்.4

இந்தியப் பிரதமர் வாஜ்பாயை பதவியிலிருந்து அகற்ற உள்துறை அமைச்சர் அத்வானி, சுப்பிரமணிய சுவாமி, தமிழக முதல்வர் ஜெயலலிதா ஆகியோர் திட்டமிட்டுள்ளனர். அத்திட்டத்தின் ஒரு பகுதியாகத்தான் சோனியா மீது ஜெயலலிதா ஆவேசத் தாக்குதல் நடத்தியுள்ளார் என தமிழகக் காங்கிரஸ் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

நேற்று செய்தியாளர்களிடம் பேசிய காங்கிரஸ் கட்சித் தலைவர் இளங்கோவன், 'ஜெயலலிதா எப்போதும் உண்மையையே பேசுவதில்லை. சோனியா மீது ஜெயலலிதா கூறிய குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் பா.ஜ.க. முன்பு கூறி வந்த குற்றச்சாட்டுக்கள்தான். மக்களால் நிராகரிக்கப்பட்ட அக்குற்றச்சாட்டுக்களைத்தான் தற்போது ஜெயலலிதா திரும்ப எழுப்புகிறார்' என்றும் தெரிவித்தார்.

(ஓ)

## இமயமலைப் பாறையில் விளம்பரம்: கோலா, பெப்சிக்கு அபராதம்!

### இந்திய உச்ச நீதிமன்றம் எச்சரிக்கை

புதுடில்லி,செப்.4

இமயமலையின் பாறைகளில் வர்ணம் பூசி விளம்பரம் செய்துள்ள கொக்கா கோலா, பெப்சி ஆகிய குளிர்பான நிறுவனங்களுக்கு அபராதம் விதிக்கப்படும் என்று உச்சநீதிமன்றம் எச்சரித்துள்ளது. இமாச்சலப் பிரதேசத்தில் மனாலி ரோடாங் சாலையில் இமயமலையின் பாறைகளில் குளிர்பான நிறுவனங்களும் வேறு நிறுவனங்களும் வர்ணங்களைப் பூசி விளம்பரம் செய்துள்ளன.

இதனால் அப்பகுதியில் சுற்றுச் சூழல் மாசுபட்டுள்ளது என்று இந்திய சட்டமா அதிபர் ஹரிஷ் சால்வே உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார். இந்த மனுவை விசாரித்த நீதிபதிகள் பாறைகளில் வர்ணங்களைப் பூசி சுற்றுச்சூழலுக்கு மாசு ஏற்படுத்துபவர்களை எச்சரிக்கும் வகையில் அவர்களுக்கு அபராதம் விதிக்கப்படும் என்று கூறினர்.

'நிபுணர் குழு இமயமலைப் பகுதிக்குச் சென்று பார்வையிடும். அக்குழுவுடன் கொக்கோ கோலா மற்றும் பெப்சி நிறுவனங்களின் பிரதிநிதிகள் செல்ல வேண்டும். இதற்கான செலவை ஈடுகட்ட 3 நாள்களுக்குள் இரு நிறுவனங்களும் தலா ரூ.50,000 (இந்தியப்பணம்) செலுத்த வேண்டும். நிபுணர்கள் குழு 10 நாள்களில் தனது அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும்' என்று நீதிபதிகள் பணித்துள்ளனர்.

(ஓ)

## பாக். தேர்தல் களத்தில் இம்ரான்கானும் 'அவுட்'

உலக அரங்கில்

இஸ்லாமாபாத்,செப்.4

பாகிஸ்தானில் ஒக்ரோபரில் நடைபெறவுள்ள தேர்தலில் போட்டியிட முன்னாள் கிரிக்கெட் வீரர் இம்ரான்கான் தாக்கல் செய்த வேட்பு மனு நிராகரிக்கப்பட்டது.

தேரிக்இஇன்சாப் கட்சியைத் தொடங்கிய அவர் பாவல்பூர் தொகுதியில் போட்டியிட வேட்பு மனுத்தாக்கல் செய்திருந்தார்.

அதில் அவர் இணைத்த ஒக்ஸ்போர்ட பல்கலைக்கழக பட்டப்படிப்பு சான்றிதழ் முறையான சான்றுழிப்புடன் இல்லை என்று கூறி தேர்தல் ஆணையம் நிராகரித்துவிட்டது. இதை அவரது கட்சி செய்தித் தொடர்பாளர் சைபுல்லா நியாஸீ தெரிவித்தார்.

'நிராகரித்ததற்கான காரணம் அற்பமானது. தேர்தலில் ராணுவ ஆட்சியை ஆதரித்தவர்களின் மனுக்களே ஏற்கப்பட்டுள்ளன' என்றார் அவர்.

ஏற்கனவே, முன்னாள் பிரதமர் பெனாஸிர்பூட்டோ தாக்கல் செய்த வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டன.

அவரது மனு நிராகரிக்கப்பட்டதைக் கண்டித்து, முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் தனது வேட்புமனுவைத் திரும்பப் பெற்றுக்கொண்டார். இதன்மூலம் முக்கிய பிரமுகர்கள் தேர்தலில் போட்டியிடுவது தவிர்க்கப்பட்டுள்ளது.

போட்டியிடும் வேட்பாளர்களின் இறுதிப் பட்டியல் எதிர்வரும் 15 ஆம் திகதி வெளியிடப்படும்.

(ஓ)

## இந்தியருக்கு எதிரான வன்முறை தென்னாபிரிக்காவில் அதிகரிப்பு!

### 14 வயது மாணவி குத்திக்கொலை

டர்பன்,செப்.4

தென்னாபிரிக்காவில் இந்தியர்களுக்கு எதிராக வன்முறை பெருகிவருகிறது. நேற்றுமுன்தினம் இந்தியவம்சாவளியான 14 வயது மாணவி குத்திக் கொல்லப்பட்டார்.

தென்னாபிரிக்காவில் இந்தியர்கள் பெருமளவில் வசிக்கிறார்கள். பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் தமிழ்நாடு, ஆந்திரா, வடநாடு ஆகிய இடங்களில் இருந்து இந்தியர்கள் கூலித் தொழிலாளர்களாக அங்கு சென்றனர்.

கறுப்பினமக்களை பெரும்பான்மையாகக் கொண்ட அந்தநாட்டில் இப்போது ஜனநாயக ஆட்சி நடந்துவருகிறது.

இந்த நிலையில் கறுப்பினமக்களில் ஒருசிலர் இந்தியர்களுக்கு எதிராக வன்முறையில் ஈடுபட்டு வருகின்றனர்.

தென்னாபிரிக்க இசைக்கலைஞரும், நாடக ஆசிரியருமான எம்போகினி என்கேமா சமீபத்தில் வெளியிட்ட இசை ஒளிநாடாவில் இந்தியருக்கு எதிரான பாடல் இடம்பெற்றுள்ளது. கறுப்பு ஆபிரிக்கர்களை இந்தியர்கள் ஒடுக்குவதாகவும், சுரண்டி வாழ்வதாகவும் அந்தப் பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்துதான் இந்தியருக்கு எதிரான வன்முறைகள் பெருகின. டர்பன் நகரில் மட்டும் கடந்த 2 மாதங்களில் 20 இந்தியர்கள் கொல்லப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் 20ஆவது நபராக 14வயது மாணவி குத்திக் கொல்லப்பட்டார். அவர் பெயர் லோவிஷா பிரசாத். டர்பன் நகரிலுள்ள ரிசர்வாயர் ஹில்ஸ் பகுதியைச் சேர்ந்தவர்.

அவரை அவரது பெற்றோர் கடைக்கு அனுப்பினர். அவர் கடைக்கு போய்விட்டுத் திரும்பி வந்தபோது கடத்தப்பட்டார்.

அதன்பிறகு ஒரு பூங்காவில் அவர் பிணமாகக் கிடந்தது கண்டுபிடிக்கப்பட்டது. அவர் உடலில் 40 கத்திக் குத்துக் காயங்கள் இருந்தன.

'அவளை நகைக்காக யாரும் கொலை செய்திருக்கமுடியாது. ஏனெனில் அவள் அணிந்திருந்த தங்கச் சங்கிலியும், கைக்கடிகாரமும் அப்படியே இருக்கின்றன. எனவே இந்தியர்களுக்கு எதிரான வன்முறைக்குத்தான் அவள் பலியாகி இருக்க வேண்டும்' என்று பொலீஸ் அதிகாரி கிளென் நாயக்கர் கூறியிருக்கிறார்.

கடந்தவாரம்தான் கிளைவ்பிள்ளை, லூயிஸ், கோவேந்தர் சண்டிப்பிள்ளை என்ற 3 நண்பர்கள் கடத்திச் செல்லப்பட்டு கொல்லப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஊழலற்ற அரசு நிர்வாகம்; உலக மாநாடு வலியுறுத்தல்

ஜோகன்ஸ்பர்க்,செப்.4

நாட்டில் ஊழலற்ற நிர்வாகத்தை அளிப்பது, பயங்கரவாதத்தை ஒழிக்க முனைப்பான நடவடிக்கைகளை எடுப்பது, எந்த ஒரு நாடும் முக்கிய விடயங்களில் தன்னிச்சையாக முடிவெடுத்து அடுத்த நாடுகள் மீது திணிப்பதைத் தடுப்பது ஆகிய அம்சங்கள் ஐ.நா.உலக மாநாட்டின் வரைவுத் தீர்மானத்தில் இடம்பெற்றுள்ளன.

மாநாடு இன்று முடிவடைகிறது. வரைவுத் தீர்மானம் அதற்குள் இறுதி செய்யப்படும். பின்னர் மாநாட்டில அது வெளியிடப்படும்.

அனைவரும் கௌரவத்துடன் வாழ வழிசெய்யும் சமூகத்தை உருவாக்க இந்த மாநாட்டின் தலைவர்கள் உறுதி எடுத்துக்கொள்கின்றனர்.

ஏழை, பணக்காரர்கள் இடையே இடைவெளி அதிகரித்துக் கொண்டே போகும் போக்கு குறித்தும் மாநாடு எச்சரிக்கிறது.

ஏழைகளின் துயர் நீக்க அடிப்படையான சில மாறுதல்களை செய்ய வேண்டும். அவ்வாறு செய்யாவிட்டால், ஜனநாயக முறையில் அவர்கள் நம்பிக்கை இழந்துவிடுவர் என்றும் மாநாட்டுப் பிரகடனம் கூறுகிறது.

முக்கிய உலக விடயங்களில் அனைத்து நாடுகளும் கலந்து பேசி செயல்பட வேண்டும். இதுதான் எதிர்காலத்துக்கு நல்லது என்றும் பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா தான் நினைப்பது தான சரி என்ற பாணியில் சில விடயங்களில முடிவெடுத்து செயல்படுவதாக சில நாடுகளுக்கு விசனம் உள்ள நிலையில் பிரகடனத்தில் இந்த அம்சம் முக்கியத்துவம் பெறுகிறது.

'உலக நாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தும் முக்கிய ஸ்தாபனம் ஐ.நா. ஆகும். நீடித்த வளர்ச்சியை ஊக்குவிக்க அதுவே சிறப்பாகப் பணியாற்ற முடியும்' என்றும் பிரகடனம் கூறுகிறது.

(ஓ)

## பாடசாலை பஸ்கள் நேபாளத்தில் எரிப்பு!

காத்மண்டு,செப்.4

நேபாளத்தில் அவசரகால நிலை நீக்கப்பட்ட பிறகு மாவோயிஸ தீவிரவாதிகளின் வன்முறைச் செயல்கள் அதிகரித்து இருக்கிறது.

சிட்வான் மாவட்டத்தில் கல்யாண் பூரில் உள்ள ஒரு பாடசாலை வளாகத்துக்கு 20 தீவிரவாதிகள் 'திடீர்' என்று நுழைந்தனர். அங்கிருந்த காவலர்களை மிரட்டி வெளியே அனுப்பினார்கள். பிறகு அங்குள்ள பாடசாலை பஸ்களில் பெட்ரோலை ஊற்றி தீ வைத்தார்கள். இதில் 5 பஸ்கள் எரிந்து சாம்பலாகிவிட்டன.

தீவிரவாதிகள் தங்கள் இயக்கத்துக்கு ஆதரவாக கோஷம் போட்டார்கள். தலைநகர் காத்மண்டுவுக்கு 90 மைல் தூரத்தில் இந்த தீ வைப்பு சம்பவம் நடந்து இருக்கிறது.

இதேசமயம் பக்தாபூர் மாவட்டத்தில் பிரதமர் தேஷர் பகதூர் தேபாவின் நேபாளி காங்கிரஸ் தலைவர் தீவிரவாதிகளால் சுடப்பட்டுள்ளார்.

(ஓ)

# HOTEL SEIVAMS

தலைநகரில் கடந்த 16 வருடங்களாக மிகவும் சிறந்த சேவை செய்யும் ஒரே ஸ்தாபனம் ஓட்டல் சீவம்ஸ்

(1) தனி அறை (Single Room)

(2) இருவர் அறை (Double Room)

மிகவும் சகாயமான வாடகைக்கு கிடைக்கும்.
இன்றே விஜயம் செய்யுங்கள்.

**HOTEL SEIVAMS**

Guest House.
53, Vivekananda Hill Colombo - 13
தொலைபேசி - 334829
Fax: 564199

(7860)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 14 - 05 - 1927



விண்ணில் 17 - 08 - 2001

### திருமதி நடராசா இராசம்மா

*அன்பின் அணிகலமாய் அமைதியின் உறைவிடமாய்*
*வாழ்வின் வழிகாட்டியாய் பண்பின் சிகரமாய்*
*குடும்பத்தின் குலவிளக்காய் ஊர்புகழும் உத்தமியாய்*
*பார்வையில் பரிவும் பாசமும் காட்டி எங்களை*
*மாண்புடன் வளர்த்து வாழவைத்துவிட்டு*
*மீளாப் பயணம் சென்ற எங்கள் அன்புத் தெய்வமே!*
*ஓராண்டு சென்றாலும் உங்கள் நினைவுகள் என்றும்*
*எங்கள் நெஞ்சைவிட்டு அகலாது. தங்கள் ஆத்மா*
*சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

*தங்கள் பிரிவால் துன்புறும்:*

மக்கள்:
கனகநாயகம் - *கனடா (மகன்)*
ஞானேஸ்வரி - *ஜேர்மனி (மகள்)*
இரத்தினம்மா - *கோண்டாவில் (மகள்)*
வசந்தகுமாரி - *முழங்காவில் (மகள்)*

மருமக்கள்:
லோகநாதன் - *ஜேர்மனி*
கலாநிதி - *கொழும்பு*
இராஜேந்திரன் - *முழங்காவில்*

பேரப்பிள்ளைகள்:
பிரவீனா, அபிராமி, ஆதித்தன் - *கொழும்பு*
பேலினா, வாகீசன், லகிசன் - *ஜேர்மனி*
பிரம்மராஜ், கம்ஷா - *முழங்காவில்*

*தகவல்:* மகள் செல்வி இ.நடராசா *(நெசவுபோதனாசிரியை)*
*கோண்டாவில் மேற்கு.* (7867)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 31 ★ 08 ★ 1941



மறைவு 04 ★ 08 ★ 2002

### அமரர் சிவசங்கரம் பாலேந்திரன்

*(முன்னாள் நீதிபதி, சாவகச்சேரி - சிரேஷ்ட சட்டத்தரணி)*

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வழிகாட்டி எம்மை
வாழவைத்த தெய்வமே - எங்கள்
இதயக் கோயிலில் என்றென்றும்
உங்கள் நினைவுத்தீபத்தை ஏற்றிவைப்போம்!

இன்று (04.09.2002) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இதனையே தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்.

*அல்வாய் வடமேற்கு,* பிரிவால் துயருறும்:
*திக்கம்.* (7677) மனைவி, தாயார்.

## கொடுப்பனவு குறித்துப் பேச்சு

கடந்த 95ஆம் ஆண்டின் காலப் பகுதியில் இடம்பெயர்ந்து வெளி மாவட்டங்களில் பணிபுரிந்த தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை ஊழியர்களுக்கு வழங்கப்படவேண்டிய சம்பள நிலுவைகள் குறித்து தலைமைக் காரியாலயத்துடன பேச்சு நடத்த தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் யாழ்.அலுவலக பிரதிநிதிகள் இருவர் கடந்த வாரம் கொழும்பு சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-4)

## சைக்கிள்கள் அன்பளிப்பு

வடமராட்சி கிழக்கு,செப்.4

பருத்தித்துறை ஞானியார் கல்விக் கழகம், பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் பணியாற்றும் எம்.எஸ்.எவ். அமைப்பைச் சேர்ந்த மருத்துவர் குட்றன் பருத்தித்துறை ஞானியார் கல்விக் கழகம் ஊடாக வறுமைக்கோட்டின் கீழ் உள்ள மூன்று மாணவிகளுக்கு சைக்கிள்களை வழங்கியுள்ளார்.

பளை மகா வித்தியாலய மாணவி சி.ஜெயசாந்தினி, பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி மாணவிகளான அ.சசிதா, ச.ரேகா ஆகியோருக்கு இச்சைக்கிள்கள் அண்மையில் வழங்கப்பட்டன. (ஒ-182)

## மீளக்குடியமரும் குடும்பங்களுக்கு பொருள் உதவி

வடமராட்சி கிழக்கு,செப்.4

வடமராட்சி கிழக்கில் மீளக் குடியமர்ந்துள்ள சுமார் மூவாயிரம் குடும்பங்களுக்கு இதுவரை அகதிகளுக்கான ஐ.நா.தூதரகம் வீட்டுப் பாவனைக்குத் தேவையான பொருள்களை வழங்கியுள்ளது.

வாளி, பாய், உணவு உண்ணும் பாத்திரங்கள், சேலை, சாரம், துணி வகைகள், சவர்க்காரம் ஆகியன குடும்ப அங்கத்தவர்கள் தொகைக்கேற்ப வழங்கப்பட்டுள்ளன.

மேலும் மக்கள் இப்பிரதேசத்தில் வந்து மீளக்குடியேறிக் கொண்டிருப்பதால் இந்த உதவி நடவடிக்கை தொடரும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-182)

## பாம்புக்கடிக்கு இலக்காவோர் அதிகரிப்பு!

யாழ்ப்பாணம்,செப்.4

யாழ்.குடாநாட்டில் நிலவும் வெப்பத்தினால் பற்றைப் பகுதிகளில் வாழமுடியாத நிலையில் குடியிருப்புப் பகுதிகளை நாடியுள்ள பாம்புகளால் மக்களுக்குப் பாதிப்புகள் ஏற்படுவதாகக் கூறப்படுகிறது.

இதற்கமைய கடந்த திங்கள், செவ்வாய்க் கிழமைகளில் மட்டும் பாம்புக் கடிக்கு இலக்காகி 7பேர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இருநாள்களிலும் யாழ்ப்பாணத்தில் செல்வரட்ணம் சாந்தருபன் (வயது 19), கே.புவனேஸ்வரி (வயது 39) அல்லாரை வடக்கு, கே.அன்னலட்சுமி (வயது 34) அல்லாரை வடக்கு, கே.பாக்கியநாதன் (வயது 53) மானிப்பாய், கந்தசாமி நிஷாந்தன் (வயது 17) கச்சாய், ஆர்.நடராசா (வயது 56) வட்டுக்கோட்டை, கந்தையா புனிதவதி (வயது 60) கோப்பாய் ஆகியோர் பாம்புக்கடிக்கு இலக்காகி யாழ்.மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஒ-15)

## கொக்குவில் இந்துக் கல்லூரி துடுப்பாட்ட வீரன் சந்திரநாதன் மதூஷன் (சனா)



இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையால் தம்புள்ள தேசிய விளையாட்டரங்கில் நடத்தப்பட்ட 17 வயதுக்குட்பட்ட மாவட்ட அணிகளுக்கு இடையேயான போட்டிகளில் சிறப்பாகத் துடுப்பாடி மாகாண அணியில் ஒரு வீரராகத் தெரிவுசெய்யப்பட்டதையும் 25.08.2002இல் கே.சி.சி.சி. விளையாட்டுக் கழகத்துக்கும் யாழ். பல்கலைக்கழக அணிக்கும் இடையே நடைபெற்ற கே.சி.சி.சி. கிண்ணத்துக்கான இறுதிப்போட்டியில் 80 ஓட்டங்கள் பெற்று சிறந்த துடுப்பாட்ட வீரருக்கான விருதைப்பெற்றமையையும் மனமாரப் பாராட்டி மேலும் துடுப்பாட்டங்களில் விருதுகள் பெறவேண்டுமென்று கொக்குவில் வாழ் துடுப்பாட்ட இரசிகர்களாகிய நாம் வாழ்த்துகின்றோம்.

கொக்குவில் வாழ்
கிரிக்கெட் ரசிகர்கள்

(7865)

## நீங்காத நினைவில் ஓராண்டு

வையகம் 1940 - 12 - 16



வைகுந்தம் 2001 - 09 - 15

### திருமதி கோகிலம் சோமசுந்தரம்

*(ஓய்வுபெற்ற ஆசிரியை)*

திதி: 04.09.2002

*எம் குடும்பத்தின் விழிகளெல்லாம்*
*நீர் தேங்கி நிற்குதம்மா!*
*வழிந்தோடும் விழிநீரில்,*
*எங்கள் விழிதேடும் உங்கள் முகம்*
*விழிதேடும் இடமெல்லாம்*
*விம்பம் போல் தோன்றுதம்மா!*

பிரிவால் துயருறும்:
கணவர் : லயன் சோமசுந்தரம்
மகன் : நித்தியானந்தா
மகள் : சுஜந்தினி, நிலானி மற்றும் மருமகன், பேர்த்தி.

*"சுஜபவனம்"*
*கற்கோவளம்,*
*பருத்தித்துறை.* (7857)

யே.ம.சு. துணை

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான 2002ஆம் ஆண்டு புரட்டாதி 4ஆம் நாள் இன்று (04.09.2002) புதன்கிழமை காலை 9.00 மணியளவில்

திரு. திருமதி தமியான் தம்பதிகளின் புதல்வன் திருநிறை செல்வன்
**யூலிதயான்**



திரு.திருமதி சற்குணம் தம்பதிகளின் புதல்வி திருநிறை செல்வி
**றஜனி**

ஆகிய இருவருக்கும் இறைவன் திருவருள் துணைகொண்டு மானிப்பாய் புனித அன்னாள் ஆலயத்தில் திருமணம் எனும் திருவருட்சாதனத்தை நிறைவேற்றப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்பசமேதரராய் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து அதனைத் தொடர்ந்து மணமகள் இல்லத்தில் நடைபெறும் இல்ல உபசரணையிலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*இவ்வண்ணம் தாங்கள் நல்வரவை நாடும்:*

திரு.திருமதி தமியான் தம்பதிகள்,
14, கதீற்றல் வீதி,
யாழ்ப்பாணம்.

திரு.திருமதி சற்குணம் தம்பதிகள்,
4ஆம் கட்டை,
ஆனைக்கோட்டை.

(7864) (இரு வீட்டார் அழைப்பு)

உதயன்

## சமாதானத்துக்கு ஆப்பு

இந்த நாட்டில் நீண்டகாலம் புரையோடிப் போயிருக்கும் இனப்பிரச்சினைக்கு சமரசத் தீர்வு காணும் முயற்சிகள் கடந்த காலங்களில் பல தடவைகள் மேற்கொள்ளப்பட்டன. அவை பயன்தராமல் தோற்றுப்போயின.

அத்தகைய முயற்சிகளில் ஏற்பட்ட பின்னடைவுகளுக்கு பொதுவான முக்கிய காரணி ஒன்று இருந்தது.

அரசியல் விவகாரத்தில் மதத் தலைவர்களின் நியாயமற்ற தலையீடுதான் அது.

அமைதித் தீர்வுகள் கிட்டாமல் முறியடித்த விவகாரங்களில் பௌத்த மதபீடத்தின் கரம் பலமாக இருந்து வந்ததுதான் கடந்தகாலச் சரித்திரம்.

மதவாதிகளின் பிடியிலிருந்து தென்னிலங்கை அரசியல் மீளும்வரை நாட்டுக்கு அமைதித் தீர்வு கிட்டாது என்ற முடிவுக்கு நாமும் மக்களும் வருமளவுக்கு நிலைமை மோசமாகவிருந்தது.

ஆனால், பேரினவாத அடக்குமுறையின் எதிர் விளைவு தென்னிலங்கை மக்களும் அதன் பாதிப்பை முற்றாக விளங்கிக்கொள்ளத்தக்க வகையில் அங்கும் தாக்கங்களை ஏற்படுத்தத் தொடங்கியதும் சமாதானத் தீர்வுக் கோரிக்கைக்கு எதிரான மதவாதக் கூச்சலும் அடங்கத் தொடங்கியது. வடக்கு - தெற்கு, கிழக்கு - மேற்கு என்று வேறுபாடின்றி அனைத்துத் தரப்பினரும் சமாதான - அமைதி - தீர்வின்பால் தாகம் கொள்ளவேண்டிய சூழலை அத்தாக்கங்கள் ஏற்படுத்தத் தொடங்கியதும் அதுவரை மதத்தின் பெயரால் முன்னின்ற பேரினவாதமும் மக்களால் புறம்தள்ளப்படத் தொடங்கியது.

அதன் விளைவாக அமைதி முயற்சிகளுக்கான வற்புறுத்தல் தென்னிலங்கையிலும் தானாகவே முகிழ்ந்து பரந்தது. அதன் பயனே தற்போதைய சமாதான நடவடிக்கைகளுக்கான உகந்த சூழ்நிலையாகும்.

பேரினவாத அடக்குமுறைக்கு எதிராகத் தெற்கில விளைவிக்கப்பட்ட தாக்கங்கள் தற்போதைய சமாதானச் சூழ்நிலையில் அடங்கிப்போக மதவாதம மீண்டும் முருங்கை மரத்தில் ஏறத்தொடங்கியுள்ளது.

கொழும்பில் பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் தேசிய பிக்குமார் சம்மேளனத்தைச் சேர்ந்த சுமார் ஆயிரம் பிக்குமார் நேற்றுமுன்தினம் கூடி நிறைவேற்றிய தீர்மானமும், அதன் பின் அவர் அந்தத் தீர்மானம் சகிதம் ஜனாதிபதி குமாரதுங்கவைச் சந்தித்து அவர்கள் விடுத்த கோரிக்கையும் மதவாதம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறத்தொடங்கியுள்ளமைக்குச் சான்றுகள்.

"புலிகள் பிரிவினை வாதிகள்; நாட்டுக்கு எதிராக ஆயுதம் தாங்கிப் போராடுபவர்கள்; அவர்கள் தனி ஈழத்தைக் கைவிடவில்லை. இலங்கை ஒரு நாடு என்பதை ஏற்காதவர்கள்; தனி இராணுவம் ஒன்றைப் பேணுபவர்கள். எனவே, இவற்றைக் கைவிட்டு, தமது நிலைப்பாட்டை அவர்கள் மாற்றாதவரை அந்த இயக்கம் மீதான தடை நீக்கப்படக் கூடாது. வடக்கு - கிழக்கு தனி நிர்வாகத்தை இனவாதக் குழுவான புலிகளிடம் ஒப்படைக்கக் கூடாது. அப்படி ஒப்படைப்பது அரசமைப்பை மீறும் செயல். அதை மீறி ஒப்படைப்பது புலிகளின் இராணுவம், பொலீஸ், நீதிமன்றம், வங்கி போன்றவற்றை சட்டரீதியாக அங்கீகரித்து விடும்" - என்று தமது தீர்மானத்தில் குரல் எழுப்பியுள்ளனர் பிக்குமார்.

புலிகள் மீதான தடையை நீக்குவதாயின் அந்த அதிகாரத்தைக் கொண்ட பாதுகாப்பு அமைச்சரே அதனைச் செய்யமுடியும். தடைநீக்கத்தைத் தடுப்பதற்காகப் பாதுகாப்பு அமைச்சுப் பொறுப்பை ஜனாதிபதி தானே தனது கட்டுப்பாட்டுக்குள் மீண்டும் கொண்டு வந்துவிடவேண்டும் என்றும் பிக்குமார் ஜனாதிபதியிடம் நேரில் கோரிக்கைவிடுத்தனர்.

பிக்குமாரின் கருத்தை அப்படியே அங்கீகரித்த ஜனாதிபதி, இந்தக் கட்டத்தில் புலிகள் மீதான தடை நீக்கப்படுவதையும், இடைக்கால நிர்வாகத்தை அவர்களுக்கு வழங்குவதையும் தானும் எதிர்ப்பதாகக் கூறியிருக்கின்றார்.

எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவும் இதே கருத்தை நேற்று ஓங்கி ஒலித்திருக்கின்றார்.

ஜனாதிபதியும் எதிரணியில் இருக்கும் அவரது பொ.ஐ.முன்னணியினரும் மதவாத - பேரினவாத - சக்திகளோடு கூட்டுச் சேர்ந்து தற்போதைய சமாதான நடவடிக்கைகளுக்கு ஆப்பு வைக்க முழுவீச்சில் தயாராகிவிட்டனர் என்பதைத்தான் இவை காட்டுகின்றன.

தீக்குள் விரலை வைக்கும் முயற்சி இது என்பதை காலம் கடந்துதான் அவர்கள் உணர்வார்கள் போலும்.

### குடாநாட்டில் நிலவும் தட்டுப்பாடு காரணமாக

# கோழி நோய்த் தடுப்பு மருந்து கொள்ளை விலையில் விற்பனை

### பண்ணையாளர்கள் கவலை

அச்சுவேலி,செப்.4

யாழ். மாவட்டத்தில் கோழிகளுக்குப் பரவும் நோய்களைத் தடுப்பதற்கான நோய்த்தடுப்பு மருந்துகளுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதாகவும் -

இதனால் தனியார் விற்பனை நிலையங்களில் அதிக விலை கொடுத்து இந்த மருந்து வகைகளைப் பெறவேண்டியிருப்பதாகவும் - கோழிப் பண்ணையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கோழிகளுக்கான நோய்த்தடுப்பு மருந்துகள் பிராந்திய கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகங்கள் மூலம் மிகக் குறைந்த விலைக்கு வாரந்தோறும் வழங்கப்பட்டுவந்தன.

கடந்த சில வாரங்களாக இந்த மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது. பிராந்திய கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகங்களில் நோய்த்தடுப்பு மருந்து வகைகளைப் பெற்றுக்கொள்ள முடியாமல் கோழிப் பண்ணையாளர்கள் சிரமப்படுகின்றனர்.

கடும் வரட்சி நிலவும் காலங்களில் கோழிகளுக்கு 'ஷீம் போறா', 'ரனிக்கட்', அம்மை போன்ற நோய்கள் தீவிரமாக பரவ வாய்ப்புண்டு. இந்த நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கு குஞ்சுப் பருவத்திலிருந்து 14ஆம் நாள், 21ஆம் நாள், 35ஆம் நாள், 90ஆம் நாள், 5ஆம் மாதம் என்ற ஒழுங்குமுறையில் தவறாது தடை மருந்துகள் கொடுக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகங்கள் மூலம் மிகக்குறைந்த விலையில் - ஒரு கோழிக்கு 07 சதம், 12 சதம், 10 சதம் ஆகிய பெறுமதியில் வழங்கப்பட்ட மருந்துகள் தனியார் ரூபா பெறுமதியில் விற்பனை செய்கின்றனர். இதனால் பெருமளவு செலவுசெய்தே நோய்த் தடை மருந்துகளைப் பெறவேண்டியிருப்பதாக கோழி வளர்ப்போர் கவலை தெரிவிக்கின்றனர். (ஒ-11)

### பதுங்குகுழிகளினூடாக

## கடல் நீர் உட்புகுவதால் பூநகரி நிலம் உவராகின்றது

பூநகரி உதவி அரச அதிபர் பிரிவு பிரதேசங்களில் முன்னாள் இராணுவத்தினர் அமைத்திருந்த பதுங்குகுழிகளாலும் உப்பாறின் தடுப்பு அணைகள் சேதமானதன் காரணத்தாலும் 9 கிராமங்களின் நிலங்கள் உவராகிவருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

வண்ணாத்தியாறு கடலில் சேரும் கரியாலை நாகபடுவான் தடுப்பு அணை சேதமானதால் கடல் நீர் உட்புகுந்து பல்லவராயன்கட்டு, நாகபடுவான், குமுழமுனை கிராமங்களின் நிலங்கள் உவராகிவருகின்றன. பொன்னாவெளி பகுதியில் நாகமுனை, வலைப்பாடு, பொன்னாவெளி கிராமங்களிலும் நிலங்கள் உவராகி வருகின்றன.

பூநகரி வடக்கில் கறுக்காய் தீவு, செல்லையா தீவு, ஞானிமடம் ஆகிய கிராமங்களில் படையினர் நிலத்தினை தோண்டி அமைத்துள்ள பதுங்குகுழிகள், அகழிகள் ஊடாக கடல் நீர் உட்புகுந்துள்ளதால் அங்கும் நிலங்கள் உவராகி வருகின்றன. இதனால் ஆயிரக்கணக்கான விளைநிலங்கள் பயிர் செய்யமுடியாதவாறு சீர்கெட்டுள்ளன. (ஓ)

## சகல ஓட்டோ உரிமையாளரும் சங்கத்தில் இணைய வேண்டுகோள்!

யாழ்ப்பாணம்,செப்.4

யாழ்.மாவட்டத்தில் சேவையில் ஈடுபட்டு வருகின்ற சகல ஓட்டோக்களும் ஓட்டோ உரிமையாளர்கள் சங்கத்தில் அங்கத்தவர்களாக இணைவதன்மூலம் பொதுமக்களுக்கு நல்ல சேவையை வழங்கமுடியும் என்று யாழ்.மாவட்ட ஓட்டோ சங்கத் தலைவர் தெரிவித்தார்.

மாவட்டத்தில் சுமார் 400 ஓட்டோக்கள் சேவையில் ஈடுபட்டு வருகின்றபோதும் இதுவரையும் 210 ஓட்டோக்கள் மட்டுமே சங்கத்தில் இணைந்துள்ளன. அவ்வாறு இணைந்தவர்களும் 'ஏனோதானோ' என்ற வகையில் வேண்டாவெறுப்பாகவே சங்கத்தின் விதிமுறைகளைக் கடைப்பிடித்து வருகின்றனர். இதனால் பல வேண்டாத விளைவுகளுக்கு முகம்கொடுக்க வேண்டியுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

சங்கத்தில் அங்கத்தவர்களாக இணைவோர் தமது ஓட்டோக்களை வேறு யாராவது செலுத்துவதற்கு அனுமதி வழங்கும் பட்சத்தில் அவர்களின் பெயரையும் சங்கத்தில் பதிவுசெய்ய வேண்டும் எனவும் - அவ்வாறு பதிவுசெய்யாதவிடத்து ஏற்படும் பிரச்சினைகளில் சங்கம் தலையிடாது என்றும் - தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடும் ஓட்டோ உரிமையாளர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு அவர்களது குற்றச் செயல்களுக்குத் தகுந்தவாறு குறிப்பிட்ட தினங்கள் அவர்கள் சேவையில் ஈடுபட தடைவிதிக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது. (ஓ-10)

### மாநகராட்சி குப்பை கொட்டுவதால்

## குருநகர் றெக்கிளமேசனில் துர்நாற்றம் வீசுகிறது

### அப்பகுதி மக்கள் முறைப்பாடு

யாழ்ப்பாணம்,செப்.4

குருநகர் றெக்கிளமேசன் குடியிருப்புப் பகுதி வடிகால்களில் கழிவுப் பொருள்கள் தேங்கிக்கிடப்பதாலும், மாநகராட்சியின் கழிவுப்பொருள்களைக் கொட்டுவதாலும் அப்பகுதியில் சகிக்க முடியாத துர்நாற்றம் வீசி வருவதாக யாழ்.மாநகரசபையிடம் முறையிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அப்பகுதிக் குடியிருப்பாளர்கள் யாழ்.மாநகர சபை ஆணையாளருக்கு அனுப்பிய முறைப்பாட்டுக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

மக்கள் செறிவாக வாழும் எமது பகுதி வடிகால்களில் அதிக குப்பைகூழங்களும் கழிவுப்பொருள்களும் தேங்கி நிற்கின்றன. மேலும் மேற்கு புறமாக உள்ள ஐஸ் உற்பத்தி தொழிற்சாலையை அண்டியுள்ள பெரிய வெளியில் மாநகர சபையினர் தினமும் சேகரிக்கும் கழிவுகளைக் கொட்டிவருகின்றனர்.

மேற்படி இரண்டு செயற்பாடுகளாலும் இப்பகுதியில் துர்நாற்றம் வீசுவதோடு அழிவுகளிலிருந்து நுளம்பு மற்றும் கிருமிப் பெருக்கம் அதிகரித்து குடிமக்களுக்கு குறிப்பாக சிறுவர்களுக்கு அடிக்கடி நோய்கள் ஏற்பட்டு வருகின்றன.

எனவே வடிகாலை சுத்தப்படுத்த வேண்டுமெனவும் பெரிய வெளியில் இனிவரும் நாள்களில் குப்பை போடுவதை தவிர்க்கும்படியும் கேட்டுக் கொள்கின்றோம் என்றுள்ளது. (ஓ-9)

### நாளை

ஆவணி 20
வியாழக்கிழமை
(05.09.2002)
திதி : திரயோதசி
பிற்பகல் 1.27 வரை.
நட்சத்திரம்: ஆயிலியம்
முன்னிரவு 11.19 வரை.
சுபநேரம் : 7.34 - 1.04
ராகுகாலம்: 1.34 - 3.04
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

ஒரு விடயத்துக்கு கோபப்படுவதன் மூலம், உங்களைத் தாக்கவேண்டிய இடத்தை எதிரிக்குக் காட்டிக் கொடுக்கிறீர்கள்.

## கொழும்பு - வவுனியா ரயிலில் தமிழ்க் குடும்பத்திடம் திருட்டு!

கொழும்பு,செப்.4

கொழும்பிலிருந்து வவுனியாவுக்கு ரயிலில் பயணஞ்செய்த தமிழ்க் குடும்பம் ஒன்றிடமிருந்து நாகலாமே பகுதியில் வைத்து பெறுமதிமிக்க தங்கநகைகள் மற்றும் ஆவணங்கள் அடங்கிய பை அபகரிக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் பற்றி கூறப்படுவதாவது:-

யாழ்ப்பாணத்தைச் ஒருவர் தனது மனைவி மற்றும் மகளுடன் கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பிலிருந்து வவுனியாவுக்கு ரயிலில் இரண்டாம் வகுப்புப் பெட்டியில் பயணித்தார். அதிகாலை 1.15 மணியளவில், நாகலாகம பகுதியில் ரயில் சென்றுகொண்டிருந்த சமயம் ஓரிடத்தில் ரயிலின் வேகம் குறைந்தது. அப்போது ரயிலுக்கு வெளிப் புறத்தி லிருந்து யன்னல் ஊடாக கையை நுழைத்த ஆசாமி ஒருவன், ஜன்னலோரமாக அமர்ந்திருந்த மகளிடமிருந்து கைப்பையை பறித்துக்கொண்டு இருட்டில் மறைந்தான். இதற்கிடையில் ரயிலின் வேகமும் அதிகரித்தது. திருடனைத் துரத்திப் பிடிக்கும் எண்ணத்தில் உடனடியாக ரயிலை நிறுத்த முற்பட்ட அவர் அபாயச்சங்கிலியைப் பிடித்திழுத்தார். ஆனால் அது பழுதடைந்ததால் ரயிலை நிறுத்தும் முயற்சி தோல்வி யடைந்தது.

இதனால் வேறு வழியின்றி, இது தொடர்பான முறைப்பாட்டை பொலீஸ் நிலையத்தில் அவர் பதிவுசெய்தார். சுமார் 10 பவுண் தங்கநகைகள், 10ஆயிரம் ரூபா பணம் மற்றும் காணி உறுதி போன்றவை அபகரிக்கப்பட்ட பையில் இருந்ததாகக் கூறப்படுகிறது.

இதுபோன்ற சம்பவங்கள் இப்பகுதியில் அடிக்கடி நிகழ்வதாக பொலிஸார் தெரிவித்தனர் எனக் கூறப்பட்டது. (ஒ-9)

## நல்லூர்த் தேருக்கு விடுமுறை; வணிகர் கழகம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,செப்.4

நாளை நடைபெறவுள்ள நல்லூர் கந்தசுவாமி ஆலய தேர்த் திருவிழாவுக்கு வர்த்தக நிறுவனங்களின் ஊழியர்கள் செல்ல வசதியாக யாழ்ப்பாணத்தில் உள்ள சகல வர்த்தக ஸ்தாபனங்களையும் பூட்டி ஊழியர்களுக்கு விடுமுறை வழங்கவேண்டும்.

- இவ்வாறு யாழ்ப்பாணம் வணிகர் கழகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

கழகத்தின் நிர்வாக சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட இந்த முடிவை சகல வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களும் ஏற்றுச் செயற்படுத்துமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஓ)

## 2000 ரூபாவுக்கு மேற்பட்ட நிலுவை உள்ள மின்சார இணைப்புகள் துண்டிப்பு!

### மின்சாரசபை நடவடிக்கை

யாழ்ப்பாணம்,செப்.4

யாழ்.நகரப்பகுதியில் பல மாதங்களாக மின் கட்டணம் செலுத்தாதுள்ள மின் பாவனையாளர்களில் 2ஆயிரம் ரூபாவுக்கு மேல் நிலுவையுள்ள மின் இணைப்புகளை துண்டிக்கும் நடவடிக்கையை இலங்கை மின்சாரசபையின் யாழ். அலுவலகம் ஆரம்பித்துள்ளது என்று மின்சார சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

மின்சாரசபை தற்போது பாரிய நஷ்டத்தில் இயங்கி வருகிறது. ஆயினும் குடாநாட்டு மக்களுக்கான தனது சேவையை சபை தொடர்ந்தும் விஸ்தரித்து வருகின்றது. மின் பாவனையாளர்கள் பலர் சீராக மின் கட்டணத்தை செலுத்தாததனால் எமது விஸ்தரிப்புப் பணியை மேற்கொள்வதில் இடையூறு ஏற்படுகிறது.

இதனைக் கருத்தில்கொண்டு யாழ்நகரப்பகுதியில் 2 ஆயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட தொகையை மின் கட்டணமாக செலுத்தாது உள்ளவர்களின் மின் இணைப்புக்களை துண்டிக்கும் பணியினை தற்போது ஆரம்பித்துள்ளோம். குறிப்பாக யாழ். நகரப்பகுதி வர்த்தகர்களும் மற்றும் சில நிறுவன அமைப்புக்களும் பெருமளவு நிலுவையைப் வைத்துள்ளனர். இது மின்சாரசபை பணிகளுக்கு குந்தகம் விளைவிக்கின்றது.

யாழ்.நகர் பகுதிக்கு வெளியே பெரும் தொகை நிலுவை உள்ள மின் இணைப்புக்களை துண்டிக்கும் பணி ஏற்கனவே இடம்பெற்று வருகிறது என்றார்.

இதேவேளை - அளவெட்டி, புத்தூர் போன்ற பகுதிகளுக்கு எதிர்வரும் 15ஆம் திகதி முதல் மின் விநியோகத்தை ஆரம்பிக்கக்கூடிய வாய்ப்புக்கள் இருப்பதாகவும் அவர் கூறினார். (ஒ-9)

# ஊழியருக்கு நிரந்தர நியமனம்

தென்மராட்சி,செப்.4

தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் கடமையாற்றும் 37ஆளணியினரை நிரந்தர நியமனம் செய்யக் கூட்டுறவு ஆணையாளரினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

சங்கத்தின் பொது முகாமையாளா, வர்த்தக முகாமையாளர், கிராமிய வங்கி முகாமையாளர், களஞ்சியப் பொறுப்பாளர் உட்பட கிளைக் கடைகளின் முகாமையாளர்கள், விற்பனையாளர்கள் ஆகியோருக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

புதிய சம்பள அளவுத் திட்டம் 31/99க்கு அமைவாக நிரந்தர நியமனம் பெற்றோரில் 22 பேருக்கான சம்பள நிலுவை அண்மையில் வழங்கப்பட்டுள்ளதாகவும் -


ஏனைய 15 பேரின் சம்பள நிலுவைகள் விரைவில் வழங்கப்படுமெனவும்-

சங்கத் தலைவர் வ.ந.வல்லிபுரம் தெரிவித்தார்.

இந்தக் கூட்டுறவுச் சங்கத்தில 51 பணியாளர்கள் கடமையாற்றி வருவது குறிப்பிடத்தக்கது. (ஒ-117)

## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 07 - 08 - 1953



உதிர்வு 24 - 08 - 1995

### அமரர் வன்னியசிங்கம் காசிலிங்கம்

*(தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, வேலைப் பரிசோதகர்)*

திதி: திரயோதசி

*அன்பின் திருவுருவே பணியின் பிறப்பிடமே*
*ஆண்டுகள் பல சென்றிடினும்*
*அப்பாவே! நீர் எமக்கு அணையாத தீபமாய்*
*ஒளிவிட்டுப் பிரகாசிக்கிறீர்!*

உங்கள் நினைவில் வாழும்:
மனைவி - புஷ்பவதி
பிள்ளைகள் - கிருபாகரன்
வாருணி, கிரிதரன்.

*அல்வாய் மேற்கு,*
*திக்கம்.*

(7843)

## 7ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 12 . 12 . 1927



மறைவு 04 . 09 . 1995

### அமரர் நாகலிங்கம் இரத்தினம்

**(றியோ கிறீம் ஹவுஸ் ஸ்தாபகர்)**

*எங்கள் அன்புத் தெய்வமே*
*எல்லோருக்கும் நல்லவரே*
*எங்களை விட்டுப் பிரிந்து*
*ஏழு ஆண்டுகள் போய் விட்டன*
*எங்களால் உங்களை மறக்க முடியவில்லையே*
*என்றும் உங்கள் நினைவுடன்*

சுதாஸ் ஐஸ் கிறீம்
448, பருத்தித்துறை வீதி
நல்லூர்,யாழ்ப்பாணம்.
T.P : 021-3687

மனைவி-
பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்

(7840)


# சுடர் ஒளி

விலை 14/-

## 03-09-2002 இதழில்

- அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் நகரும் சமாதான முயற்சிகள்
- திருமலையை அச்சுறுத்தும் வன்முறைகள்
- சிறிமா அரசை ஆட்டவைத்த தமிழரசு தபால் தலை
- சோனியாமீது ஜெயலலிதா சேற்றை வாரி வீசியது ஏன்?
- இடைக்கால நிர்வாகம் இன்னும் இல்லை ஆனால் இப்பவே வந்த மாதிரித்தான் – (நேரடி)
- நல்லூர் தேர்ச் சிறப்பிதழ்
- அலைகளின் காவியம் கவிதைத் தொடரில் இடம்பெயர்வு
- மற்றும் மதன் சித்திரத் தொடர்கதை, இணையத் தளங்களில் இருந்து, சினிமா, விளையாட்டு, இளஞ்சுடர், அரசியல் அம்பலம், மசாலா மிக்ஸ், கவிதைப் புனல் உட்பட பல்வேறு சுவையான அம்சங்கள்.





சுடர் ஒளி வாரப்பத்திரிகையின் விலை 3ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது.
உங்கள் முகவரிடம் கேட்டுவாங்குங்கள்.
(C/23362)

# யாழ். கல்வித் தரத்தை மேம்படுத்த உடனடி நடவடிக்கைகள் அவசியம்

2002ஆம் ஆண்டு நடைபெற்ற ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் யாழ். மாவட்டப் பெறுபேறுகள் மிகவும் வீழ்ச்சியடைந்துவிட்டன என்றும் யாழ்ப்பாணம் கல்வியில் பின்தங்கிவிட்டது என்றும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் யாழ்.வலயப் பாடசாலைகள் அனைத்திலும் கிடைத்த பெறுபேறுகள் பற்றிய பகுப்பாய்வை ஆராய்வது நன்மை பயக்கும்.

குறித்த பாடங்களுக்குத் தோற்றியவர்களின் தொகையும் Aதரச் சித்தி பெற்றவர்களின் தொகையும் சதவீதமும் சித்தியடையத் தவறிய மாணவர் தொகையும் சதவீதமும் அட்டவணை Iஇல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை IIஇல் துறை ரீதியாக மூன்று பாடங்களில் சித்தி பெற்ற மாணவர் தொகை, சதவீதம், மூன்று பாடங்களிலும் சித்தியடையத் தவறிய மாணவர் தொகை, சதவீதம் என்பன தரப்பட்டுள்ளன.




இந்த அட்டவணைகளைப் பார்க்கும் பொழுது விஞ்ஞானப் பிரிவிலேதான் அதிகவீழ்ச்சி தென்படுகிறது. 1999ஆம் ஆண்டு சாதாரண தரப் பரீட்சையில் 10A பெற்ற மாணவர் இப்பரீட்சையில் ஒரு சித்தியை மாத்திரமே பெற்றது கவனிக்கப்படவேண்டியதாகும். கலை, வர்த்தகத்துறைகளில் பெரிதாக வீழ்ச்சி ஏற்படவில்லை. இம்முறை விஞ்ஞானப் பிரிவு மாணவர்களின் பெறுபேறுகளிலேயே பெருமளவு வீழ்ச்சி காணப்படுகிறது. இவ்வீழ்ச்சிக்குக் காரணிகளைக் கண்டு அவற்றிற்குப் பரிகாரம் காணவேண்டிய பொறுப்பு யாழ்.மாவட்டக் கல்வியியலாளர்களுக்குரியதாகும் யாழ்ப்பாண மாணவர்களின் விடைத்தாள்கள் சரியான முறையில் புள்ளியிடப்படாமை யாழ். மாவட்டப் பெறுபேறுகளில் வீழ்ச்சி ஏற்பட்டமைக்கான காரணிகளில் ஒன்றாகக் கூறப்படுகிறது. இக்கூற்றையும கல்வியியலாளர்கள் கவனத்திற்கொண்டு அது உண்மைதானா என்று அறிதல் வேண்டும். மாவட்ட நிலையில் முதல் 100 நிலைகளிலுமுள்ள விடைத்தாள்களையேனும் அவை சரியான முறையில் புள்ளியிடப்பட்டுள்ளனவா என்பதை அறிய வேண்டும். அல்லது மீள் பார்வைக்காக விண்ணப்பிக்கப்படும் விடைத்தாள்களையாவது யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பாடத்துறை சார்ந்த கல்வியியலாளர்கள் பார்வையிட முயற்சி எடுக்கவேண்டும்.

1990ஆம் ஆண்டிற்குப் பின் யாழ். குடாநாடு இலங்கையின் ஏனைய பகுதிகளிலிருந்து துண்டிக்கப்பட்டுத் தனிமைப்படுத்தப்பட்டது. பொருளாதாரத்தடை, எரிபொருள்தடை, மின் தடை, அன்றாட பாவனைப் பொருள்களின் தடை எனப் பலவிதமான தடைகளுக்கு யாழ்.மாவட்ட மாணவர்கள் முகங்கொடுக்க நேரிட்டது. 1995ஆம் ஆண்டிலிருந்து பல்வேறு இராணுவ நடவடிக்கைகளையும் பல இடப்பெயர்வுகளையும் யாழ். மாவட்ட மாணவர் எதிர்கொள்ள நேரிட்டது. அதுமட்டுமல்ல குடாநாட்டுப் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள் போக்குவரத்துப் பிரச்சினை, தொடர்பாடல் பிரச்சினை போன்ற காரணிகளால் உரிய காலப்பகுதிக்குரிய கலைத்திட்ட மாற்றங்களை அறியாதவர்களாகவே இருந்தனர். இவையும் எமது மாணவர்களின் பின்னடைவுகளுக்குக் காரணிகளாக அமைந்தன. இதே போன்ற கடினமான சூழ்நிலைகளுக்கு வேறெந்த மாவட்ட மாணவர்களும் முகங்கொடுத்திருக்கமாட்டார்கள். எனவே யாழ்மாவட்ட மாணவர்களுக்கு விசேட சலுகைகள் வழங்கப்படுவது இன்றைய சூழ்நிலையில் அவசியமாகிறது.

## விவரன்

இலங்கையின் ஏனைய பின்தங்கிய மாவட்டங்களைவிட யாழ்.மாவட்டமே மிகமிகப் பின் தங்கிய மாவட்டமாக இன்றுள்ளது. எனவே பின்தங்கிய மாவட்டங்களின் வெட்டுப்புள்ளிக்கு சமமாக யாழ்.மாவட்ட வெட்டுப்புள்ளி குறைக்கப்படவேண்டும். இங்கு முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியதென்னவென்றால் மிகமிக முன்னேற்றமடைந்த மாவட்டங்களான மேல் மாகாணத்தைச் சேர்ந்த கம்பஹா, களுத்துறை மாவட்டங்களின் வெட்டுப்புள்ளிகளை விட யாழ்.மாவட்டத்தின் வெட்டுப்புள்ளி அதிகமாக இருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது. இந்நிலை தவிர்க்கப்படுவது மிகவும் முக்கியமானதாகும். ஏனெனில் கடந்த காலங்களை அவதானிக்குமிடத்து இம்மாவட்டங்களின் வெட்டுப்புள்ளிகளைவிட யாழ்.மாவட்ட வெட்டுப்புள்ளி அதிகமாக இருந்தது குறிப்பிடத்தக்கது. இது தொடர்பாக கல்வியியலாளர்களும் அரசியல் முக்கியஸ்தர்களும் உயர்கல்வி அமைச்சுக்கும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுக்கும் அழுத்தங்களைக் கொடுப்பதன்மூலமே கூடுதலான மாணவர்களை பல்கலைக்கழகத்திற்கு உள்வாங்க முடியும்.

சென்ற கல்வி ஆண்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு 100 இடங்கள் ஒதுக்கப்பட்டபோதும் பல வெற்றிடங்கள் காணப்பட்டன. சென்ற முறை யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 48 மாணவர்கள் மருத்துவத்துறைக்குத் தெரிவாகினர். இம்முறை அத்தொகை 36 ஆக வீழ்ச்சி கண்டுள்ளது. திறமை அடிப்படையில் சுமார் 10 மாணவர்கள் மட்டும் தெரிவுசெய்யப்பட்டதாலேயே மொத்தத் தொகை இவ்வாறு வீழ்ச்சி கண்டுள்ளது.

யாழ்.மாவட்ட நிலையில் 35ஆவது நிலையிலுள்ளவர் தேசிய நிலையில் 877ஆவது இடத்திலுள்ளார். இவரின் Z புள்ளி 1.7511ஆகும். யாழ்.மாவட்ட நிலையில் 60ஆவது இடத்திலுள்ளவர் பெற்ற Z புள்ளி 1.6202ஆகும். இவர்கள் பெற்ற மொத்த புள்ளிகள் வெளியிடப்படாத போதிலும் இவர்கள் பெற்ற மொத்த புள்ளிகள் வெளியிடப்படாதபோதிலும் இவர்கள் பெற்ற மொத்தப் புள்ளிகளின் வித்தியாசம் ஆறு புள்ளிகள் மட்டுமேயாகும். 60ஆவது இடத்தைப் பெற்றவரின் Z புள்ளியை விட குறைவாகப் பெறும் வேறு மாவட்ட மாணவர்கள் மருத்துவத் துறைக்குத் தெரிவுசெய்யப்படப் போவது காலப்போக்கில் தெரிய வரும். எனவே யாழ்மாவட்ட நிலையில் முதல் அறுபது நிலையில் உள்ளவர்களை இம்முறை யாழ்.மருத்துவ பீடத்திற்கு தெரிவுசெய்யும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியது இன்றைய காலகட்டத்தில் கட்டாயதேவையாகும்.

யாழ். மருத்துவபீடத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட 100 இடங்களை 130 ஆக அதிகரித்து மிகமிகப் பின் தங்கியுள்ள யாழ்.மாவட்ட மாணவர்களுக்கு விசேட அனுமதி வழங்கப்பட கல்வியியலாளர்களும் அரசியல் முக்கியஸ்தர்களும் ஆவன செய்ய வேண்டும். திறமை அடிப்படையில் முந்திய காலத்தைப்போல் யாழ். மாவட்ட மாணவர்கள் தெரிவுசெய்யப்படும் நிலை வரும்வரை இவ்வாறான நடைமுறை தொடர நடவடிக்கை எடுக்கப்படுவது சம்பந்தப்பட்டோரின் பொறுப்பாகும். ★

| பாடம் | தோற்றிய மாணவர் | A தரம் | சதவீதம் | சித்தியின்மை | சதவீதம் |
|---|---|---|---|---|---|
| உயிரியல் | 437 | 12 | 2.75 | 92 | 21.05 |
| பௌதிகவியல் | 1083 | 64 | 5.91 | 352 | 32.50 |
| இரசாயனவியல் | 1083 | 36 | 3.32 | 516 | 47.65 |
| இணை. கணிதம் | 649 | 45 | 6.93 | 268 | 41.29 |
| பொருளியல் | 784 | 56 | 7.14 | 180 | 22.96 |
| கணக்கீடு | 710 | 76 | 10.70 | 168 | 23.66 |
| வணிகக்கல்வி | 688 | 13 | 1.89 | 152 | 22.09 |
| அளவையியல் | 905 | 30 | 3.32 | 174 | 19.23 |
| தமிழ் | 783 | 14 | 1.79 | 184 | 23.45 |
| இந்து நாகரிகம் | 717 | 45 | 6.28 | 59 | 8.23 |
| கிறிஸ்தவம் | 211 | 41 | 19.43 | 3 | 1.42 |
| நாடகமும் அரங். | 151 | 3 | 1.99 | 31 | 20.53 |
| புவியியல் | 171 | 8 | 4.68 | 10 | 5.85 |
| சங்கீதம் | 67 | 9 | 13.43 | 11 | 16.42 |

அட்டவணை I

| துறை | தோற்றியோர் | 3 பாடங்களில் சித்தி | சதவீதம் | 3 பாடங்களிலும் சித்தியின்மை | சதவீதம் |
|---|---|---|---|---|---|
| உயிரியல் | 436 | 245 | 56 | 76 | 17.4 |
| கணிதம் | 648 | 261 | 40 | 181 | 26.3 |
| வர்த்தகம் | 725 | 492 | 67.8 | 72 | 10 |
| கலை | 1055 | 711 | 675 | 40 | 3.7 |

அட்டவணை II

# மாநகர சுத்திகரிப்பு ஊழியர்கள் வேலைநிறுத்தத்திற்கு முஸ்தீபு

யாழ்ப்பாணம்,செப்.4

மாநகரசபையில் பணியாற்றும் தற்காலிக சுத்திகரிப்புத் தொழிலாளர்களுக்குரிய நான்கு நாள் சம்பளப் பணத்தை உடனடியாக வழங்காது விட்டால் மீண்டும் வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதிக்கப் போவதாக வடபிராந்திய ஐக்கிய தொழிலாளர் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து சங்கம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த ஜூன் மாதம் முதலாம் திகதி தொடக்கம் 4ஆம்திகதி வரையான நான்கு நாள்கள், முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து எமது தொழிலாளர்கள் மேற்கொண்ட வேலைநிறுத்தம் மாநகரசபை நிர்வாகத்தின் உறுதிமொழியை அடுத்துக் கைவிடப்பட்டது.

அவ்வாறு கைவிடப்பட்டபோது போராட்டத்தில் ஈடுபட்ட தற்காலிக சுத்திகரிப்புத் தொழிலாளர்களின் சம்பளப்பணத்தை வழங்கவேண்டும் என்று நாம் கேட்டிருந்தோம். சம்பளப் பணத்தை வழங்குவதற்கு நிர்வாகம் ஒப்புக்கொண்டபோதும் உடனடியாக அதனை வழங்கமுடியாது என்றும் 50 நாள்களின் பின்பே அதனை வழங்கமுடியும் என்றும் தெரிவித்தது.

ஆனால், மூன்று மாதங்கள் கழிந்துவிட்ட நிலையிலும் இன்னும் தொழிலாளர்களுக்குரிய சம்பளப்பணம் வழங்கப்படவில்லை. எனவே உடனடியாக நான்கு நாள் சம்பளப்பணத்தை வழங்கவேண்டும் எனவும் அவ்வாறு வழங்காதுவிட்டால் மீண்டும் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுவது தவிர்க்க முடியாதது - என்றுள்ளது. (ஓ-10)

## வீட்டினுள் நுழைந்து தங்க நகைகள் அபகரிப்பு

வலி.வடக்கு,செப்.4

வீட்டிலுள்ளவர்கள் ஆழ்ந்த நித்திரையில் இருந்த சமயம் வீட்டுக்குள் நுழைந்த திருடர்கள் தாலிக்கொடி உட்பட சுமார் 75ஆயிரம் ரூபா பெறுமதியான தங்கநகைகளைத் திருடிச் சென்றுள்ளனர்.

மல்லாகம் மதி வீதியில் உள்ள வீடு ஒன்றிலேயே இத்திருட்டுச் சம்பவம் இடம்பெற்றது.

இரவு உறங்கச் செல்லும்போது வீட்டின் வெளிக்கதவைத் திறந்து வைத்துக் கொண்டே வீட்டிலிருந்தவர்கள் உறங்கியதாகவும் -

அந்தவேளையிலேயே திருட்டு நடந்ததாகவும் - கூறப்படுகிறது.

இச்சம்பவம் குறித்து பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.(ஓ-86)

# வன்னிக்கு வந்த எண்ணெயில் இரசாயனக்கலப்புக் கண்டுபிடிப்பு!

கிளிநொச்சி,செப்.4

உடலுக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய இரசாயனப் பொருள்கள் அடைக்கப் பயன்படுத்தப்பட்ட கொள்கலன்களில் மரக்கறி எண்ணெய் அடைக்கப்பட்டிருந்ததை தமிழீழ சுகாதாரத் துறையினர் கண்டுபிடித்துள்ளனர்.

தென்பகுதியிலிருந்து புலிகளின் கட்டுப்பாட்டு வன்னிப் பிரதேசத்திற்கு வர்த்தக நோக்குடன் கொண்டு வரப்பட்ட மரக்கறி எண்ணெய் அடைக்கப்பட்டிருந்த 50 கொள்கலன்களே இரசாயனப் பொருள்களைக் கொண்டிருந்தவை எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

அந்தக் கொள்கலன்களுக்குள் உள்ள மரக்கறி எண்ணெயை மீண்டும் சுத்திகரித்துப் பயன்படுத்தினால் கூட அதில் கலந்துள்ள இரசாயனப் பொருள்களினால் ஏற்படும் பாதிப்பை தவிர்க்கமுடியாதென்றும் -

பொதுமக்களின் நலனைக் கருதாது இடம்பெறும் இத்தகைய நடவடிக்கைகள் கவலைக்குரியவை என்றும் -

தமிழீழ சுகாதாரத் துறையினர் தெரிவித்துள்ளனர். (ஓ-12)

# அனுருத்தவின் செயல் வெட்கக்கேடானது!

## மகாநாயக்கர் கண்டனம்

கொழும்பு,செப்.4

முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தையின செயல் வெட்கப்படவேண்டிய ஒரு விடயமாகுமென மல்வத்த பீட மகாநாயக்கர் சங்கைக்குரிய ரம்புக்வெல ஸ்ரீ விபஸ்ஸி தேரர் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் மல்வத்த பீடத்தில் மகாநாயக்கரைச் சந்தித்து உரையாடியபோதே தேரர் இவ்வாறு குறிப்பிட்டார்.

'நாட்டின் உயர் பதவிகளில் ஒன்றாகக் கருதப்படும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் பதவியில் இருந்த ஒருவர் இவ்வாறு நாட்டின் நிதியை தனக்கெனத் திரட்டி வைத்திருந்தமை தேசத் துரோகத்திற்கு ஒப்பானதொரு செயலாகும் எனவும் மகாநாயக்கர் மேலும் தெரிவித்துள்ளார். (ஓ-12)

## முறிகண்டிவாசி காச நோயால் உயிரிழப்பு!

கோப்பாய்,செப்.4

கோப்பாய் சுற்றயல் கூறு மருத்துவமனையில் காசநோய்க்கு சிகிச்சை பெற்று வந்த ஒருவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை உயிரிழந்தார்.

கிளிநொச்சி முறிகண்டியைச் சேர்ந்த செல்லையா பழனிவேல் (வயது 49) என்ற மேற்படி நோயாளி முறிகண்டிப் பிள்ளையார் ஆலயத்தில் சேவகம் செய்பவராவார்.

தற்போது உறவினர் எவரும் உரிமைகோராத நிலையில் கோப்பாய் மருத்துவமனை பிரேத அறையில் சடலம் வைக்கப்பட்டுள்ளது. (ஓ-72)

## மிதிவெடியில் சிக்கி மாடு காலிழந்தது!

தென்மராட்சி,செப்.4

'இராணுவப் பாதுகாப்பு அரணுக்கு அருகில் மேய்ச்சலுக்குக் கட்டிய பசுமாடு மிதிவெடியில் சிக்கி காலை இழந்த சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி கச்சாய் வீதியில் இடம்பெற்றது.

குடியிருப்பு இல்லாத காணியில் தினமும் மாட்டை மேய்ச்சலுக்கு கட்டுவதாகவும் -

அன்று காலையில் மாட்டைக் கட்டிவிட்டு வந்த ஒரு மணித்தியாலத்தில் மாடு மிதிவெடியில் அகப்பட்டதாகவும் -

மாட்டின் உரிமையாளர் தெரிவித்தார்.

இதேவேளை - பிரிட்டிஷ் கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் சங்கத்தானைப் பகுதியில் மிதிவெடி அகற்றும் பணியினை நேற்றுமுன்தினம் ஆரம்பித்துள்ளனர். (ஓ-31-117)

## தாழையடி உபதபாலகம் சொந்த இடத்தில்

வடமராட்சி கிழக்கு,செப்.4

இடம்பெயர்ந்து வேறிடத்தில் இயங்கும் தாழையடி உபதபால் நிலையத்தை, தாழையடியில் இயங்க வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

பளை தபால் நிலையம் நேற்றுமுன்தினம் தொடக்கம் பளையில் இயங்க ஆரம்பித்ததையடுத்து அதன் கட்டுப்பாட்டுக்குள் இயங்கும் தாழையடி உபதபால் நிலையமும் சொந்த இடத்தில் இயங்கவுள்ளது.

மருதங்கேணிப் பிரதேசத்தில் மக்கள் மீளக்குடியமர்ந்ததினாலும், அரச அலுவலகங்கள் பாடசாலைகள் அப்பகுதியில் இயங்க ஆரம்பித்ததினாலும் தாழையடி உபதபால் நிலையத்தை மீண்டும் சொந்த இடத்தில் இயங்க வைக்குமாறு அப்பகுதி பொது அமைப்புகள் கடந்த சில மாதங்களாக வேண்டுகோள் விடுத்துவந்தன. (ஓ-182)

## கிணற்றுள் வீழ்ந்து சிறுமி காயம்!

யாழ்ப்பாணம்,செப்.4

வாளி மூலம் கிணற்றில் தண்ணீர் அள்ளிய சிறுமி, வாளிக் கயிறு காலைச் சுற்றி இழுத்ததால் கிணற்றுக்குள் தவறி வீழ்ந்து படுகாயமடைந்தார்.

காரைநகரில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் நடேசமூர்த்தி சர்மிளா (வயது 08) என்ற சிறுமியே காயமடைந்தவராவார்.

படுகாயமடைந்தவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஓ-15)

## கிளைக் கடை திறப்பு

வடமராட்சி,செப்.4

வடமராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஆழியவளையில் கிளைக் கடையினைத் திறந்துள்ளது.

இக்கிராமத்தில் சுமார் 300 குடும்பங்கள் மீளக் குடியமர்ந்ததை அடுத்து இக்கிளைக்கடை திறந்து வைக்கப்பட்டுள்ளது. (ஓ-182)

## களஞ்சிய அறை திருத்தப்பணி

தென்மராட்சி,செப்.4

தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் களஞ்சியத்தில் சேதமடைந்த அறை சங்க நிதியில் திருத்தப்பட்டுவருகிறது.

சேதமடைந்த இந்த அறையின் கட்டடத் திருத்த வேலைக்கு 50ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டதாக சங்கத் தலைவர் வ.ந.வல்லிபுரம் தெரிவித்தார். (ஓ-117)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

சரோஜினிதேவி என்பவரது விசேட அடையாள அட்டை (இல. 090900996), சி.சசிதா என்பவரது விசேட அடையாள அட்டை (இல. 0909028160) என்பன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் அல்வாய் தெற்கு, அல்வாய் எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (7842)

வடிவேல் பேரின்பம் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல. 417181563V) கச்சேரிக்கும் யாழ். பஸ்தரிப்புக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஊரெழு கிழக்கு, சுன்னாகம் என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும். (7838)

சுதுமலை தெற்கு, மானிப்பாயைச சேர்ந்த கந்தையா பொன்ராசா என்பவரின் தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை என்பன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கே.கே.எஸ்.வீதி, பூநாறிமரத்தடியிலுள்ள கமலா வைத்தியசாலையில ஒப்படைத்து உதவவும். (7859)

நுணாவில் மேற்கு, சாவகச்சேரியை சேர்ந்த ஜெகதீஸ்வரகுருக்கள் மயூரன் என்பவரது தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை (இல.091029677), பாடசாலை அடையாள அட்டை என்பன மத்திய கல்லூரிக்கும், பஸ்நிலையத்திற்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மதுரா No.1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். (7866)

கரணவாய் வடக்கு (மத்தி), கரவெட்டியைச் சேர்ந்த இராசு ரஜினி என்பவருடைய தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை, வங்கி புத்தகம் என்பன கறுப்பு நிற பேர்ஸுடன் பஸ்சில் தவறிவிட்டன. கண்டெடுத்தோர் தயவுசெய்து குஞ்சாவளவு, கரணவாய் மத்தி, கரவெட்டி எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (7874)

## விற்பனைக்கு

பாவித்த மரத்தளபாடங்கள் மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: No.50, ஸ்ரீ வெங்கடேசன் வீதி, யாழ்ப்பாணம் (சயன்ஸ் ரியூசன் முன்பாக). (7849)

நல்ல நிலையில் உள்ள லான்சா கார் Box மொடல் 13-xxxx உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரிகள்: 45, புதிய சிவன் வீதி, நல்லூர் (021-3826) கனகு மெக்கானிக் திருநெல்வேலி (புறோக்கர் தேவையில்லை). நேரில் வரவும். (7868)

154 ஹொண்டா சுப்பர் கப் 50 Deluxe Ecomony self start Lancer மொடல் 1st Owner மோட்டார் சைக்கிள விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 109, இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம். (7882)

1½ வயது நிரம்பிய கறுப்பு நிற (அல்சேஷன்) நாய் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இ.நடராசா மேபா செல்வரட்ணம், பத்தானை வீதி, தாவடி தெற்கு, கொக்குவில்.(7847)

சிங்கர் தையல் நிக்ஸி மெஷின் வெள்ளைநிறம், காஸ்குக்கர், பிள்ளைத் தொட்டில் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல. 44, புதுவீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். (7855)

## வீடு விற்பனைக்கு

45/10, நாயன்மார் வீதி, நல்லூரடியில் 1½ பரப்புக் காணியுடன் கூடிய தனிக்கிணறு, மின்சார வசதியுள்ள வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ம.தேவலிங்கம்,45, சிறாம்பியடி லேன், யாழ்ப்பாணம். T.P.No.2791 (7863)

உடுவில், லவ்லேனில் 4 பரப்புக் காணியுடன் உள்ள வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ஸ்ரீரஞ்சன், 41, றக்கா லேன், சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (7821)

## காணி விற்பனைக்கு

தொல்புரம் மத்தியில், அமெரிக்கன் மிஷன் பாடசாலைக்கு அண்மையில் காணி விற்பனைக்கு உண்டு. காலை 10.00 மணிக்குப் பின்னர் தொடர்பு கொள்ளலாம். 01-501699 கொழும்பு. (7751)

## திருமண சேவை

எம்முடன் நேரில் தொடர்புகொள்ள முடியாதவர்களின் வசதிகருதி கடிதத் தொடர்பை ஏற்படுத்தியுள்ளோம். இதற்கிணங்க சகல விவரங்களையும் கடிதத்தில் எழுதி எம்மிடம் அனுப்பி பதிலைப் பெற்றுக்கொள்ளலாம். துர்க்கா திருமண சேவை, 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (7873)

## மணமகன் தேவை

யாழ்.இந்து, 1963ஆம் ஆண்டு, அனுஷம் 1, 2இல் செவ்வாயுள்ள படித்த பெண்ணுக்கு உள்ளூர்/வெளியூரில் தகுந்த மணமகனைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். விளம்பர இல.1624, மே/பா உதயன், யாழ்ப்பாணம்.(7846)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 34 வயதுடைய, செவ்வாய் தோசமற்ற, மூல நட்சத்திரம், பட்டதாரிப் பெண்ணுக்கு அரச தொழில் புரிகின்ற தகுந்த மணமகன் தேவை. குடும்ப விவரம் குறிப்புடன் தொடர்புகொள்ளவும். விளம்பர இல.1625, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (7852)

## கோழிக்குஞ்சு விநியோகம்

Prima Broiler குஞ்சுகள் Prima சிவப்புப் பேட்டுக் குஞ்சுகள் (வருடத்திற்கு 300 முட்டைகளிடும்) வெள்ளைப் பேட்டுக்கு குஞ்சுகள் (வருடத்திற்கு 320 முட்டைகளிடும்) 05-09-2002 வியாழக் கிழமை மாலை விநியோகிக்கப்படும். முதல் நாள் தடுப்பு மருந்து போட்டுத் தரப்படும். முன்கூட்டியே பதிவுசெய்யவும். தொடர்பு: 19,முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர்.(7598)

## வீடு வாடகைக்குத் தேவை

ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபருக்கும் சட்டத்தரணியாகிய அவரது மகளுக்கும் நல்ல சூழ்நிலையில் யாழ்ப்பாண நகரை அண்டிய பகுதியில வீடு வாடகைக்குத் தேவை. தொடர்பு: S.P. பாலராஜா, 73, றக்கா வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (7809)

## தேவை

நல்ல காய்ந்த கடலட்டைகள் கொள்வனவு செய்யப்படும். வைத்திருப்போர் பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளவும். தொடர்பு: பிரசாந், Tel No. 074-512188, 556324. (7841)

## பட்டப்பகலில் வீடுடைத்துக் கொள்ளை

வட்டுக்கோட்டை,செப்.4

வீட்டிலுள்ளோர் மரணச்சடங்கு ஒன்றிற்குச் சென்றவேளை, பட்டப் பகலில் வீட்டை உடைத்து பெறுமதி வாய்ந்த பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

வட்டுக்கோட்டையில் நேற்று முன்தினம் மதியவேளையில் இக்கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. சம்பவதினத்தன்று உறவினர் ஒருவரின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்ள வீட்டைப் பூட்டிவிட்டு அனைவரும் சென்றதாகவும் -

திரும்பி வந்து பார்த்தபோது வீடு உடைக்கப்பட்டு ரீவி, டெக் வானொலி, நகைகள் உட்பட பெறுமதி வாய்ந்த பொருள்கள் அனைத்தும் திருடிச் செல்லப்பட்டிருந்ததாகவும்-

வீட்டு உரிமையாளர் தெரிவித்தார்.

சம்பவம் இடம்பெற்ற அன்று முற்பகல் 11மணியளவில் சந்தேகத்துக்கிடமான ஒருவர் வாடகைக்கு வீடு உண்டா? என்று அப்பகுதியில் வீடு வீடாகச் சென்று விசாரித்ததாக அயலவர்கள் தெரிவித்துள்ளனர்.(ஓ-ரி)

## கிறிஸ்ரல் சென்ரர்

நெல்லியடி.

**ஆங்கில வகுப்பு**

பிரிவு IV (29)

ஆரம்பம்: 05.09.2002

3.15 p.m.

ஆசிரியர்:

(7877) சடகோபன்

## படிவம்

மக்கள்வங்கி உதவிப் பயிலுநர் பதவிகளுக்கான விண்ணப்பப் படிவங்கள் விற்பனையாகின்றன. வயதெல்லை 22.G.C.E. (O/L) 4 Credit Pass. G.C.E. (A/L) 4/3 Credit Pass .

விண்ணப்ப முடிவு திகதி: 16-09-2002.

**பாரதி பதிப்பகம்**

430, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம். (C/23649)

---

இளங்கலைஞர் மன்றம்
*கலாபூஷணம்* பொன்.சுந்தரலிங்கம்
*மிருதங்க வித்துவான* கண்ணதாசன் ஆகியோரின்
மாணவர்களான "நயினை மைந்தர்களின்"

## தெய்வீக நாதம் ~ இசைக்கச்சேரி

*இடம்:* *நல்லூர் வடக்கு வீதி, ஸ்ரீராகவேந்திரா ம்ருத்திக்கா சபா மண்டபம்*
*காலம்:* நாளை (05.09.2002) வியாழக்கிழமை தேர்த்திருவிழா நாள்
*நேரம்:* மாலை 6.30 மணி (புதிய நேரம்)
*பாட்டு:* "ஈழத்து சீர்காழி, இன்னிசை மைந்தன்"
செல்வன் சிவமைந்தன் பத்மநாதன்
செல்வி சாந்தினி பத்மநாதன்
*மிருதங்கம்:* செல்வன் ரங்கநாதன் பத்மநாதன்
*கடம்:* திரு.மாசிலாமணி தர்மா
*நன்றி நவில்தல்:* செல்வி தர்மினி பத்மநாதன்
(யாழ். பல்கலைக்கழகம்)

*கலைஞர்கள், இசை ஆர்வலர்கள், உற்றம், சுற்றம் அனைவரையும் மனந்திறந்து அழைக்கின்றோம்.*

*இல.9, மாட்டீன் லேன், யாழ்ப்பாணம்.* திரு.திருமதி யோகலட்சுமி பத்மநாதன் தம்பதிகள். (7870)

---

தென்மராட்சி சிற்றூர்தி சேவைகள் சங்கம்

## முக்கிய அறிவித்தல்

எமது 01.08.2002ஆம் திகதிய உதயன் 10ஆம் பக்க விளம்பர அறிவுறுத்தலுக்கமைய சகல வாகனப் பதிவுகளும் நிறுத்தப்பட்டுள்ளதனால், எக்காரணம் கொண்டும் இவ்விடயம் சம்பந்தமாக விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதை இத்தால் தெரிவிததுக்கொள்கின்றோம்.

(சி-23650) - நிர்வாகம்.

## சுய வேலைவாய்ப்பு

**பிரிண்டிங் செய்வது எப்படி?**

*வகுப்புகள் ஆரம்பம்:* 10.09.2002 மு.ப.9.00 மணி (கிழமை நாள்கள்)

*குறிப்பு:* இயந்திரம் இன்றி உங்கள் வீட்டிலேயே வைத்து திருமண அழைப்பிதழ், வாழ்த்துக்கள், லெட்டர்பேட், விசிட்டிங் கார்ட், ஸ்டிக்கர், லேபிள், மரம், தகரம், பிளாஸ்டிக் பொருள்கள், பேனா முதலியவற்றில் பிரிண்டிங் செய்ய 10 நாள்கள் செய்முறைப் பயிற்சி தருகின்றோம்.

**ஓடர்கள் செய்து கொடுக்கப்படும்.**

தொடர்பு: *S.நிசாந்தன்,*
*18/5, மாட்டீன் வீதி, யாழ்ப்பாணம்.* (7869)

## வாகன துணுகொல

(வில்லுத்தகடுகள்)

ஓஸ்டின், L.D., BMC, கொமர், பெட்பட், ஹினோ, ஹில்மன், பென்ஸ், Fiat, மொரிஸ்மைனர், துனுகொல (வில்லுத்தகடு) வகைகளும் மற்றும் அதற்குரிய தொகையான உதிரிப்பாகங்களும் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகொள்ளவும்: 077-861801
Contact: 072-901776 (சி-23623)

## மரண அறிவித்தல்

### திருமதி சரஸ்வதி மார்க்கண்டு

புன்னாலைக்கட்டுவன் வடக்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி மார்க்கண்டு 01.09.2002 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மார்க்கண்டுவின் அருமை மனைவியும் சட்டம்பியர் வைத்திலிங்கம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற புருஷோத்தமன் மற்றும் சிவபாதமலர், தேவாம்பிகை ஆகியோரின் அன்புத் தாயாரும் அம்பிகாதேவி, J.B.சீவரத்தினம், இராமநாதன் ஆகியோரின் அன்பு மாமியாரும் அபிரா (I.T.Park), துசியந்தன், அனுசியா, சிவாலிங்கம், றொகான் (London) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் விதுஷனின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் No. 37, Frances Road, Wellawatta வில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக இன்று (04.09.2002) புதன்கிழமை பி.ப. 3.00 மணியளவில் பொரளை கனத்தை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஊரெழு கிழக்கு, சுன்னாகம்.* (7880)

தகவல்:
மகள் - மலர்,
பேர்த்தி - அபிரா.

---


# சுகாதார விஞ்ஞானத் துறையில் தொழில்

சுகாதார விஞ்ஞானத்தில் திருப்திகரமான தொழிலைக் கொண்டிருப்பதற்கு நீங்கள் மருத்துவராக, அல்லது பல் வைத்திய நிபுணராக இருக்கத் தேவையில்லை. இதோ உங்களுக்கு ஒரு நல்ல செய்தி.

அவுஸ்திரேலியாவில் உள்ள மிகவும் மேன்மையான பல்கலைக்கழகங்கள் சுகாதார விஞ்ஞானத் துறையில் மிக உயர்வான, பல்வகைப்பட்ட விசேடமான பாடநெறிகளை வழங்குகின்றன.

நாம் பிரதிநிதித்துவப்படுத்தும் அவுஸ்திரேலியாவில் உள்ள பல்கலைக்கழகங்களிலிருந்து பட்டதாரிகளுக்கு உலகம் பூராவும் அதிகளவு கிராக்கியுள்ளது.

நீங்கள் பின்பற்றக்கூடிய பாடநெறிகள் வருமாறு:

* உயிரியல் மருத்துவ விஞ்ஞானம்
* நரம்பு விஞ்ஞானம்
* உயிரியல் தகவலியல்
* பகுப்பாய்வு இரசாயனவியல்
* சட்டமருத்துவ இரசாயனவியல்
* மருத்துவக்குரிய துறை
* உயிரியல் மருத்துவ எந்திரவியல்
* மூலக்கூறு உயிரியல்
* குற்றவியலியல்
* நோயியல்
* உட்டற்றொழிலியல்
* உளவியல்
* பிறப்புரிமை எந்திரவியல்

2003 பெப்ரவரிக்கான மாணவர்களின் தெரிவுவரை அவுஸ்திரேலியாவுக்கான மாணவ விசாக்கள் வழங்கல் தளர்த்தப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களுக்குத் தொடர்பு கொள்ளுங்கள்:-
திருமதி கோகிலாதேவி மகேந்திரராஜா
சுகந்தம் வன்னியசிங்கம்வீதி
இணுவில் தெற்கு சுன்னாகம் 070 - 212641
கிழமை நாள்கள் - மாலை 5.00 - 9.00
வார இறுதி நாள்கள் - காலை 8.00 - மாலை 9.00

edlocate
EDUCATION AUSTRALIA

எட்லொக்கேற் (பிறைவேற்) லிமிற்றெற்
23/1, றொஸ்மீட் பிளேஸ், கொழும்பு 07
தொலைபேசி: 670748, 074 - 618718 பக்ஸ்: 074 - 790957
ஈமெயில்: marketinge@edlocate.lk
வெப்சைட்: www.edlocate.lk

Impact House of Advertising



இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் தமிழ் அலைவரிசை வடபகுதிக்கு விஸ்தரிக்கப்படுவதையொட்டிய நிகழ்வு நேற்றுமுன்தினம் யாழ்.செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. அந்த நிகழ்வில் கலந்துகொண்டோரில் யாழ்.படைகளின் பிரதி இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் டி.ரத்தினசபாபதி, 51ஆவது பிரிகேட் இராணுவ அதிகாரி பிரிகேடியர் ரஞ்சித்சில்வா, விடுதலைப் புலிகளின் யாழ்.கோட்ட அரசியல் துறையைச் சேர்ந்த தமிழன்பன், விஜதரன், நகுலன், வணக்கத்துக்குரிய ஒவிட்டிகமுவே போதிரத்ன தேரர், நல்லைக் குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாசார்ய சுவாமி, யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, யாழ்.படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா, இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் ஆகியோரைப் படங்களில் காணலாம்.

### கடந்த காலங்களைப் போலன்றி

# இனிமேலாவது நடுநிலைமையுடன் 'ரூபவாஹினி' செயற்படவேண்டும்!

## புலிகளின் பிரமுகர் கோரிக்கை

யாழ்ப்பாணம்,செப்.4

'தமிழ் மக்களின் கலை கலாசார உரிமைகள் மற்றும் பொருளாதாரக் கட்டமைப்புக்களை வெளிப்படுத்தும் வகையில், கடந்த காலங்களைப் போல் அல்லாமல் நடுநிலையுடன் ரூபவாஹினி இனிச் செயற்படவேண்டும்.'

ரூபவாஹினி ஒளிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவை விஸ்தரிப்பு நிகழ்வு நேற்றுமுன்தினம் யாழ்.செயலகத்தில் நடைபெற்றபோது விடுதலைப் புலிகளின் யாழ்.கோட்ட அரசியல் பிரிவைச் சேர்ந்த நகுலன் இவ்வாறு கோரினார்.

தொடர்ந்து அவர் அங்கு பேசுகையில் கூறியதாவது -

'தமிழீழ விடுதலைப் புலிகள் மீதும் அவர்களால் மேற்கொள்ளப்படுகின்ற போராட்டம் பற்றியும் தென்பகுதிச் சகோதர இனமக்கள் மனதில் தவறான எண்ணங்களைத் தோற்றுவித்ததோடு விடுதலைப் புலிகள் ஒரு பயங்கரவாத இயக்கம் என சேறுபூசுவதிலும் கடந்த காலங்களில் அரசு ஊடகங்கள் ஈடுபட்டன. அந்த நிலைமை மாற்றியமைக்கப்பட்டு தமிழீழ விடுதலைப் புலிகள் பற்றியும், அவர்களால் மேற்கொள்ளப்படும் போராட்டம் பற்றியும் தெளிவான உண்மையான கருத்தை வெளிப்படுத்தும் வகையில் 'ரூபவாஹினி' தொழிற்படவேண்டும்.

'சொந்த இடங்களைவிட்டு இடம்பெயர்ந்து அல்லற்பட்டு துன்பப்படும் எமது மக்களின் துயரங்களை தென்பகுதி மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும். எமது மக்கள் சொந்த இடங்களில் சுதந்திரமாக உரிமையோடு மீளக் குடியேறுவதற்கு எமது தலைவராலும், இலங்கை அரசாலும் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் வழி சமைத்துள்ளது. இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் சரியான முறையில் செயற்படுவதற்கு அனைத்துத் தரப்பினரும் விட்டுக் கொடுப்புடனும், அர்ப்பணிப்புடனும் செயற்படவேண்டுமென இத்தருணத்தில் கேட்டுக்கொள்கின்றேன். அரசுடன் எமது தேசியத் தலைவர் பேச்சில் ஈடுபடும்போது பூநகரிப் பாதையிலுள்ள இராணுவத்தை வெளியேற்றி எமது மக்கள் சுதந்திரமாக நடமாடுவதற்கு பாதையைத் திறக்கக்கோரியபோதும் சந்திரிக்கா அரசு அதற்கு இணங்காததால் பாரிய யுத்தம் ஏற்பட்டது. இக்கொடிய யுத்தத்தினால் பாரிய இழப்புகள் ஏற்பட்டன. அன்றைய அரசு எமது தலைவரின் வேண்டுகோளை ஏற்று பாதையைத் திறந்து போக்குவரத்துக்கு அனுமதித்திருப்பின் இவ்வளவு உயிரிழப்புக்களும் ஏற்பட வாய்ப்பேற்பட்டிருக்காது.

'ஆனால் அந்த நிலை மாறி சகல இனமக்களும் எங்கும் சுதந்திரமாக நடமாடக்கூடி ஒரு சூழ்நிலையை எமது தலைவரும், இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவும் ஏற்படுத்தியிருக்கின்றனர். இதனைத் தொடர்வதற்கு ஊடகங்கள் நேரிய வழியில் செயற்படவேண்டியது அவசியமானதாகும்.

அதுமட்டும் அல்லாது ஏமது மக்களின் கலை, கலாசார விழுமியங்களை வெளிக்கொணர்ந்து மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தக்கூடிய நடவடிக்கைகளைத் தனது தமிழ் சேவை அலை வரிசையை யாழ்ப்பாணத்துக்கு விஸ்தரிக்கும் ரூபவாஹினி கூட்டுத்தாபனம் மேற்கொள்ளவேண்டும்' என்றார் அவர். (ஓ-ரி)

### பருத்தித்துறை மறியற்போரில்

# செய்தியாளர் தாக்கப்பட்டமைக்கு பத்திரிகையாளர் சங்கம் கண்டனம்

யாழ்ப்பாணம்,செப்.4

பருத்தித்துறையில் வடமராட்சி மாணவர் ஒன்றிய ஏற்பாட்டில் இடம்பெற்ற மறியற்போராட்டத்தின்போது செய்தியாளர்கள் இருவர் படையினரால் தாக்கப்பட்டதுக்கு வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

செய்தியாளர்கள் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக சங்கம் வெளியிட்ட கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

நேற்றுமுன்தினம் பருத்தித்துறையில் இடம்பெற்ற மாணவர்களின் மறியற்போராட்டத்தில் ஏற்பட்ட குழப்ப நிலையின்போது எமது சங்க உறுப்பினர்களான செய்தியாளர்கள் இருவர் படையினரால் தாக்கப்பட்டமை குறித்து வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் அதன் கண்டனத்தை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கின்றது.

பத்திரிகையாளர்களின் பணிகளுக்கு வாய்ப்பூட்டும் போட முயற்சிக்கின்ற இத்தகைய செயல்கள் ஜனநாயக சூழ்நிலையில் ஏற்புடையதல்ல.

புரிந்துணர்வு ஒப்பந்தம் நடைமுறையில் இருக்கும் வேளையில் இத்தகைய விரும்பத்தகாத சம்பவங்கள் இடம்பெற்றமை சமாதானத்தை விரும்பும் மக்களின் மனங்களில் பேரிடியாக இறங்கியுள்ளது என்றுள்ளது. (ஓ)

## வாராந்த வெள்ளி நிகழ்வு

யாழ்ப்பாணம்,செப்.4

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினர் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்திவரும் வாராந்த வெள்ளி நிகழ்வில் இவ்வார நிகழ்வாக ஆவரங்காலைச் சேர்ந்த விமலேஸ்வரி பொன்னுத்துரையின் இன்னிசை நிகழ்வு நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் அறிமுகவுரையை கு.அருணகிரிநாதன் நிகழ்த்தவுள்ளார். (ஓ)

## கோண்டாவில் வீதி திருத்தப் பணியில் மோசடி?

வலி.வடக்கு,செப்.4

கோண்டாவில் வடக்கு வாகீஸ்வரி சனசமூக நிலையத்திற்கு முன்புறமாக உள்ள சென்.செபஸ்தியன் வீதியைத் திருத்த உடைந்த ஓடுகள், கூரைசீற் துண்டுகள் மற்றும் பழைய கட்டடங்களின் இடிபாடுகள் ஆகியன பயன்படுத்தப்படுவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கல் போட்டு வீதி அமைக்க நிதி ஒதுக்கப்பட்டுள்ள போதிலும் ஒப்பந்தக்காரர்களின் இத்தகைய செயற்பாட்டில் ஈடுபட்டுவருவதாகப் பொதுமக்கள் கூறுகின்றனர்.

இவ்வாறு பழைய ஓடுகள் மற்றும் உடைந்த வீடுகளின் இடிபாடுகள் பயன்படுத்தப்பட்டு பல வீதிகள் ஏற்கனவே செப்பனிடப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இதேநேரம் இவ்வீதிகளுக்கு பறிக்கப்படவேண்டிய கற்கள் அதிகாரி ஒருவரால் தனிப்பட்ட தேவைக்குப் பயன்படுத்தப்படுவதாக அறியவருகிறது. இதுதொடர்பாக நல்லூர்ப் பிரதேச சபையினர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர். (ஓ-86)

# 'நல்லைக் குமரன்' மலர் வெளியீடு கொடியேற்றமன்று நடக்கவேண்டும்!

## நல்லை ஆதீன முதல்வர் விரும்பம்.

யாழ்ப்பாணம்,செப்.4

அடுத்த ஆண்டு முதல் 'நல்லைக் குமரன்' மலரை நல்லூர்க்கந்தசுவாமி ஆலய கொடியேற்றத் திருவிழா தினத்தன்று வெளியிடவேண்டும்.

நல்லை ஆதீன மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற 'நல்லைக் குமரன்' மலர் வெளியீட்டு விழாவில் ஆசியுரை வழங்கிய நல்லையாதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் இவ்வாறு விருப்பம் வெளியிட்டார்.

மாநகர ஆணையாளர் இ.இராமலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் உரையாற்றிய சுவாமிகள் மேலும் தெரிவித்ததாவது:-

முருகனின் புகழை, பெருமையைப் பேசுகின்ற இந்த மலர் ஒவ்வோர் ஆண்டும் வெளியிடப்பட்டு வருவது பெருமைக்குரிய விடயமாகும்.

இதுபோலவே பல விடயங்களிலும் மாநகர சபை தனது செயற்பாட்டை மேற்கொள்ளவேண்டும். நல்லூர் ஆலயத்தின் சுற்றாடலில் செய்ய வேண்டிய மேலும் பல நல்ல பணிகளை மாநகர சபை நிர்வாகம் செய்ய வேண்டும் என்றார். இந்நிகழ்வில் உரையாற்றிய செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் தெரிவித்ததாவது:-

சைவ சமயத்தைச் சேர்ந்தவர்கள் தமது சமய நிகழ்வுகளில் பங்கேற்பதைக் கூட ஏனோதானோ என்று ஈடுபாடின்றி மேற்கொள்கின்றனர். இந்த நிலை முதலில் மாறவேண்டும். யாழ்ப்பாண வழிகாட்டி கையேடு ஒன்றை வெளியிடவேண்டியதும் அவசியமாகும்' - என்றார். (ஓ-10)

# நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

(சப்பரத் திருவிழா)



## முத்துச் சப்பரத்தில் நீ வருவாய்!

முந்தை வினைகளெல்லாம் முழுதாக மறைந்துவிடும்
முருகா என்றுன் பெயர் சொன்னால்
சிந்தையிலே தெளிவுவந்து சிறப்பான வாழ்வுவரும்
சிங்காரவேலா என்றுன்னை நினைந்து கொண்டால்

சந்தனம் பூசிமேனி பளபளத்தொளி வீச
சுந்தர வடிவாய் நீ உலா வருகின்றாய்
மந்திர ஒலி முழங்க மங்கல இசைகொட்ட
முத்துச் சப்பரத்தில் நீ வலம் வருகின்றாய்.

விடத்தற்புளையூர் M.தவம்.

## இன்பமணி எழுப்பிவிடும்

கூவும் சேவல் கொக்கறுகோ என்றிசைக்க
ஏவும் நல்லூர் இன்பமணி எழுப்பிவிடும்
நாவில் ஒலிக்கும் நாதம்; கனீரென்று
பாவில் தெறிக்கும் பைந்தமிழ்(ப்) பாசுரங்கள்

- முருகனடியான்.

## தமிழ்த் தெய்வம்

காலன் பயத்தை ஓட வைப்பான்
சாலச் சிறந்த தெய்வமவன்
பாலமுருகன் காலமாகி நினமுதிப்பான்
ஈழத் துயரைத் துடைத்திடுவான்
வாழும் மாந்தர் தமிழ்த் தெய்வம்
நாளும் பொழுதும் கதி நீயே
மூளும் போரை யகற்றியருள் புரிவாய்
ஈழம் அமைதி சோலை வனமாக்கு

தென்புலோலியூர்
கவிஞர் ந.சங்கரலிங்கம்.

## நெருப்பை அணைக்கச் சிரி

தேனோடு திணைமாவுஞ் சுவைத்து ஆடும்
திருவேலா... நல்லையெங்கும் அமுதம் ஊற்று
தானென்னும் அகம்பாவச் சூரர் மாரைத்
தடுத்தாண்டு யாவரையும் தேவர் ஆக்கு
ஏனிந்த வாழ்க்கையென்று ஏங்குகின்ற
ஏழைகட்குக் கருணைநிறை செல்வங் காட்டு
"நீ பொய்மைத் தெய்வமல்ல நிசமே" என்று
நேர்ந்து அழும் பக்தருக்கும் அன்பை ஊட்டு

கோபுரத்தில் நீ சிரிப்பாய் சேவல் கூவும்
கொடியினிலும் நீ சிரிப்பாய் நல்லூர் நாற்றின்
வேரினிலும் உன் சிரிப்பு இருப்பதாற்றான்
வீதியெங்கும் புனித நதி ஓடுதைய்யா!
ஓடுமந்த நதி ஞான சூனியரை
ஒளிரும் ஞான சூரியராய் மாற்றுதைய்யா!
நீ குளிர்ந்து... அருள் மழையைப் பொழிந்திந் தேச
நெருப்பணைக்கச் சிரிப்பதற்கேன் தயக்கம் ஐய்யா!

த.ஜெயசீலன்.

## கொக்கறுத்த கோவே; கோடி முறை வணங்குகிறோம்

அருணகிரிக் கருளியவா
ஆறுபடை வீருடையாய்
குமரகுருபரன் வாயாலே
கொஞ்சு தமிழ் இயம்ப வைத்தாய்
அப்பனுக்கு ஆசானாய்
தப்பாமல் சொன்னவனே
ஆனைமுகன் பழம் வேண்ட
அகில மெலாம் சுற்றியவா
சிக்கல் தனை அறுத்து
சீலமுடன் வாழ வைப்பாய்
கொக்கறுத்த கோவே
கோடி முறை வணங்குகிறோம்.

கைதடியூர் பரம்சோதி.

# இலங்கைப் பொலீஸ் வரலாற்றில் என்றுமில்லாதவாறு பதவிப்போட்டி!

**பொலீஸ்மா அதிபர் லக்கி கொடித்துவக்குவின் திடீர் மரணத்தை அடுத்து அந்தப் பதவியைக் கைப்பற்றுவதில் மூத்த இரு பிரதிப் பொலீஸ்மா அதிபர்களுக்கிடையே உக்கிரப்போட்டி நிலவுகிறது. தற்போதுள்ள இருமுனைப் போராட்டம் இன்னும் ஓராண்டில் நான்கு முனைப் போராட்டமாகவும் அமையலாம். இது குறித்து கயான் குமார வீரசிங்க எழுதி "லக்பிம" வார இதழில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

## மாற்றார் தோட்டத்திலிருந்து....

### தமிழில்: வீயெஸ்ரீ

பொலீஸ்மா அதிபர் லக்கி கொடித்துவக்குவின் மரணத்தை அடுத்து ஏற்பட்டுள்ள பதவிவெற்றிடத்துக்கு



பிரதிப் பொலீஸ்மா அதிபர் **கொட்டகதெனிய**

யார் நியமிக்கப்படக்கூடுமென்ற கேள்வி, பொலீஸ் திணைக்களத்தைப்போன்றே அரசியல் அரங்கிலும், பொதுமக்களிடையேயும் பெரும் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

இப்பதவி நிரப்பப்படுவது சம்பந்தமாகப் பொலீஸ் திணைக்களத்தினுள்ளே கடும் போராட்டங்கள் தற்போது இடம்பெற்றுவருவதே இதற்கான காரணமாகும்.

சிரேஷ்ட உதவிப் பொலீஸ்மா அதிபர்களான எச்.எம்.ஜீ.பி.கொட்டகதெனியவுக்கும், ரீ.ஈ.ஆனந்தராஜாவுக்கும் இடையேதான் இந்த மோதல் இடம்பெறுகின்றது.

இவ்விருவரும் பொலீஸ் திணைக்களத்தில் இன்று சேவையாற்றும் சிரேஷ்ட அதிகாரிகளாவர். ஆனால், ஆனந்தராஜாவைவிட கொட்டகதெனிய சேவை மூப்பின் அடிப்படையில் நான்கு ஆண்டுகள் மூத்தவராவார்.

கொட்டகதெனியா 1966ஆம் ஆண்டில் ஓர் உதவிப் பொலீஸ் அத்தியட்சகராகப் பொலீஸ் சேவையில் இணைந்துகொண்டார்.

ஆனந்தராஜா 1971ஆம் ஆண்டில் ஓர் உதவிப்பொலீஸ் அத்தியட்சகராகப் பொலீஸ் சேவையில் இணைந்தார். அதற்கு முன்னர் அவர் ஓர் உதவிப்பொலீஸ் இன்ஸ்பெக்டராகக் கடமையாற்றியதாகக் கூறப்



பொலீஸ்மா அதிபர் (காலஞ்சென்ற) **லக்கி கொடித்துவக்கு**

படுகிறது.

இருந்தபோதும் கொட்டகதெனிய சிரேஷ்ட உதவிப்பொலீஸ்மா அதிபராக 1994ஆம் ஆண்டில் பதவியுயாவு பெற்றார். இதற்கு நான்கு ஆண்டுகளுக்குப் பின்னர், அதாவது 1998 ஆம் ஆண்டில் ஆனந்தராஜா சிரேஷ்ட உதவிப் பொலீஸ்மா அதிபராகப் பதவி உயர்த்தப்பட்டார்.

லக்கிகொடித்துவக்கு பொலீஸ்மா அதிபராக நியமனம் பெற்ற வேளையில் பொலீஸ் திணைக்களத்தில் சிரேஷ்ட உதவிப் பொலீஸ்மா அதிபர்களாக ஐவர் கடமையாற்றினர்.

சேவைமூப்பு அடிப்படையில் எஸ்.ஜீ.டீ.டீ.சில்வா, எம்.எம்.குணரத்ன, ஏ.எஸ்.செனிவிரத்ன, எச்.எம்.ஜீ.பி.கொட்டகதெனிய மற்றும் ரீ.ஈ.ஆனந்தராஜா ஆகியோரே அந்த ஐவருமாவர்.

அவர்களில் இன்று பொலீஸ் சேவையில் இருப்பவர்கள் கொட்டகதெனிய, ஆனந்தராஜா ஆகிய இருவர் மட்டுமே. மற்றையோரில் சிலர் மரணமடைந்துவிட்டனர். ஏ.எஸ்.செனிவிரத்ன உள்நாட்டுப் பாதுகாப்பு அமைச்சின் பாதுகாப்பு சம்பந்தமாக, அமைச்சரின் ஆலோசகராகக் கடமையாற்றுகிறார்.

கடந்த காலங்களில் பொலீஸ் திணைக்கள உயர் அதிகாரிகளிடையே இடம்பெற்ற ஊழல்கள் மற்றும் மோசடிகளை கொட்டகதெனிய பகிரங்கமாக விமர்சனம் செய்தார். பொலீஸ் திணைக்களத்தின் உயர் கௌரவம் காப்பாற்றப்படவேண்டுமாயின், முழுத் திணைக்களமும் மீளமைப்புச் செய்யப்படவேண்டுமென அவர் கூறினார்.

இந்த விமர்சனங்கள் காரணமாகப் பல பொலீஸ் அதிகாரிகள் குழப்பமடைந்தனர். குறிப்பாக காலமாகிவிட்ட பொலீஸ்மா அதிபரே குழப்பமடைந்தார். பொலீஸ்மா அதிபர் கொடித்துவக்குவின் சேவைக் காலத்தை அடுத்தடுத்து ஜனாதிபதி நீடித்தமையும் கொட்டகதெனியவின் மனக்குழப்பத்திற்குக் காரணமாய் அமைந்தது.

இதனால் கொட்டகதெனியவுக்குக் கிடைக்கவிருந்த பொலீஸ்மா அதிபர் பதவி நாளுக்குநாள் தள்ளிப்போய்க்கொண்டிருந்தது. பொலீஸ் திணைக்களத்தில் இடம்பெற்ற இவ்வாறான நிர்வாக மாற்றங்களால் கடந்தகாலங்களில், பொலீஸ்மா அதிபர் லக்கி கொடித்துவக்குவுக்கும், கொட்டகதெனியவுக்கும் இடையே சுமுகமான நிலைமை நிலவவில்லை.

இந்நிலை நாளடைவில் மற்ற அதிகாரிகள் மத்தியிலும் பரவலாயிற்று. கொட்டகதெனிய திறமையான, நேர்மையான அதிகாரியாகக் கணிக்கப்பட்டார்.

அவர் கொழும்பு பிரதிப் பொலீஸ்மா அதிபராகக் கடமையாற்றியபோது அவரது திறமை பெரிய அளவில் வெளியானது.

அரசியல்வாதிகளின் கட்டளையைக் கணக்கில் எடுக்காது, குற்றத் தடுப்பு நடவடிக்கைகளில் விரைவான கடும்போக்கைக் கைக்கொண்டார். இதனால், கொழும்பு நகரம் பூராகவும் சில நாள்களிலே குற்றச் செயல்கள் குறைவடைந்தன.

ஆயினும் அப்பதவியில் அவரால் நீண்டகாலம் நீடிக்க முடியவில்லை. அவர் பொலீஸ் தலைமைக் காரியாலயத்துக்கு மாற்றம் செய்யப்பட்டார்.

இதனால் பொதுமக்கள் மத்தியில் இவருக்கு இயல்பாகவே நன்மதிப்பு ஏற்பட்டது.

கடந்த காலங்களில் பொலீஸ் சேவையில் இடம்பெற்ற முறையற்ற சம்பவங்களைப் பொதுமக்கள் மத்தியில் அவர் வெளியிட்ட காரணத்தினால் அவரைப் பற்றிய ஒரு நல் அபிப்பிராயம் பொதுமக்களிடையே உருவானது. பொலீஸ்மா அதிபர் லக்கி கொடித்துவக்குவும் இதே போன்று கொட்டகதேனியாவின் விமர்சனத்துக்கு உள்ளானார். இதன் காரணமாக பொலீஸ்மா அதிபர் லக்கி கொடித்துவக்குவுக்கும், கொட்டகதெனியாவுக்குமிடையே மோதல்கள் ஆரம்பித்தன. இருவரும் தமக்கிடையே அதிகம் பேசிக்கொள்ளாமல் தமது கருத்துப் பரிமாறல்களை எழுத்தில் மேற்கொள்ளுமளவுக்கு இநத மோதல்கள் நீண்டன. ஒரு சில மோதல்கள் தொடர்பாக நீதிமன்றம் சென்று தீர்வு காணும் நிலையுருவானது.

இதன்காரணமாக பொலீஸ்மா அதிபர் கொடித்துவக்கு வெளிநாட்டுப் பிரயாணம் மேற்கொண்டபோது, பொலீஸ்மா அதிபரின் கடமைகளைக் கவனிக்கும் பொறுப்பை ஆனந்தராஜாவிடம் ஒப்படைத்துச் சென்றார்.

இதனால், ஆனந்தராஜாவுக்கும், கொட்டகதெனியாவுக்குமிடையே சிற்சில கருத்துவேறுபாடுகள் உருவாகின. பொலீஸ்மா அதிபர் லக்கி கொடித்துவக்கு சேவையினின்றும் ஓய்வுபெற்ற பின், அடுத்த பொலீஸ்மா அதிபர் பதவிக்கு இவ்விருவரில் எவர் நியமிக்கப்படவுள்ளனர் என்ற எதிர்பார்ப்பின் விளைவே இவர்கள் இருவருக்குமிடையே கருத்துமோதல் ஏற்படக் காரணமாகும்.

இன்றுவரையில் இந்த விவகாரம்



பிரதிப் பொலீஸ்மா அதிபர் **ஆனந்தராஜா**

அதே நிலையிலேயே இருந்துவருகிறது.

அடுத்த பொலீஸ்மா அதிபர் யார் என்ற விவரம் இக்கட்டுரை எழுதப்படும்வரை (ஓகஸ்ட் 29ஆம்திகதி) தீர்மானிக்கப்படவில்லை. *(தொடரும்)*


## SRI MURUGAN

தொலைத் தொடர்பு சேவையின்
மற்றுமொரு தொலைபேசி
Dialog GSM இணைப்புகளுடன்
கையடக்கத் தொலைபேசி,
இதற்குரிய காட் (Cards)
பல அரிய சலுகையுடன் உங்கள் கைகளில்!
மேலும் விவரங்களுக்கு உடன் நாடுங்கள்:

**Sri Murugan**

303, K.K.S. Road,
Jaffna. T.P: 021 - 2670
(C-23664)



## விற்பனைப் பிரதிநிதி தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் நிறுவனம் ஒன்றுக்கு PVC பைப் வகைகள் மற்றும் ஏனைய பொருள்களைச் சந்தைப்படுத்துவதற்கு தகுதிவாய்ந்த ஆண் விற்பனைப் பிரதிநிதி ஒருவர் தேவை.
கல்வித் தகைமை - க.பொ.த.சாதாரண தரம்
வயது எல்லை - 20 முதல் 40 வரை
தகுதியுள்ளோர் 07.09.2002இற்குமுன் விண்ணப்பிக்கவும்.
☆ ஆங்கிலத்திலும், சிங்களத்திலும் பேச, எழுதத் தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
*விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:*
விளம்பர இல. 1628
C/o உதயன், யாழ்ப்பாணம்.
(C/23667)



## DIALOG G.S.M

யாழ்நகரில்

சில தினங்களில் அறிமுகமாகவுள்ள டயலொக் (DIALOG) கையடக்கத் தொலைபேசி இணைப்புகளைப் பெற்றுக்கொள்ளல்.
- இலங்கையின் எப்பாகத்திற்கும், உலகின் எப்பாகத்திற்கும் துரித தொடர்புகளுக்கு DIALOG GSM இணைப்புகள்.
- உள்வரும் அழைப்புகள் 30 செக்கன் அளவீடு சலுகையும் (FREE), ஒரு வருட உத்தரவாதமும்

நாடுங்கள்

**THE PHONE SHOP**
பலாலி வீதி, திருநெல்வேலிச் சந்தி, யாழ்ப்பாணம்.

கலா விற்பனை நிலையம்
பலாலி வீதி, திருநெல்வேலிசந்தி,
யாழ்ப்பாணம்.

ஜெயா அழகுமாடம்,
149, நவீன சந்தை,
யாழ்ப்பாணம். 021-2171

ACX வான் தபால் பொதி
விநியோக சேவை.
இல. 8 நவீன சந்தை மேல்மாடி.
யாழ்ப்பாணம்.
021-2405, 077-519440

சித்தி விநாயகர்
தொலைத்தொடர்பு நிலையம்,
பலாலி வீதி, புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
புன்னாலைக்கட்டுவன் சந்தி.
070-213123, 077-723180

★ டயலொக் கிற் (DIALOG KIT) 400/-, 1000/- காட்களையும் பெற்றுக்கொள்ளலாம்.
★ கையடக்கத் தொலைபேசி கையாளும் முறையும் அதன் விளக்கங்களும் தகவல் பதிவும் செய்துதரப்படும்.
(7898)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி இராசம்மா தம்பிராசா

கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் புன்னாலைக்கட்டுவன் வடக்கைப் புகுந்த இடமாகவும்கொண்ட திருமதி இராசம்மா தம்பிராசா அவர்கள் 01.09.2002 ஞாயிற்றுக்கிழமை பிரான்ஸில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - நல்லம்மா தம்பதியினரின் மூத்தமகளும் காலஞ்சென்ற தம்பிராசா (C.T.B.) அவர்களின் அன்பு மனைவியும் கலைஞானதேவி (பிரான்ஸ்), கோமதி(பிரான்ஸ்), உதயகுமார் (கனடா), புவிராணி(பிரான்ஸ்), பிரேமிளா(லண்டன்), காலஞ்சென்ற சுரேஸ்குமார் ஆகியோரின் அருமைத் தாயாரும் இராசதுரை(பிரான்ஸ்), காலஞ்சென்ற சபாலிங்கம்(பிரான்ஸ்), பாமதி(கனடா), சிறீஸ்கந்தராசா (பிரான்ஸ்), மகாராஜா(லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஜான்சன், சேயோன், நிரோஷன், ஜருஷன், சங்கரி, ஜனா, சோதியன், சுசீக்கா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் இராசநாயகம் (பிரசித்த நொத்தாரிசு), திருமதி இராஜேஸ்வரி கனகசபை ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

